# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 7

(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீ லங்கா
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 07

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

கத்தோலிக்க திருமறை

தரம் 07

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2016

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு

தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதி பணிப்பாளர் நாயகம்

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனை** : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாளர்** : அருட்பணி. கால்டன் டி சில்வா
விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்

அருட்பணி. எஸ். அந்திரியாஸ் ஏ. பர்ணாந்து அ.ம.தி.
(உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்)

**எழுத்தாளர் குழு** :

- அருட்பணி. ஜூட் தஸநாயக்க. முதுமாணி
விரிவுரையாளர்,
கல்வியியற் கல்லூரி, பிங்கிரியா.

- திரு. எஸ். ஜீ. கே. டி. எல். சீ. பிரசாத். முதுமாணி
ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், ஹோமாகம.

- செல்வி துஷ்மந்தி டி சில்வா
ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம்,
மிநுவன்கொடை.

- செல்வி. டி. ஐ. ஜோசப்
ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், கொழும்பு.

- திரு. ரீ. ஐ. இரங்கநாயகம். கலைமாணி
ஆசிரியர், புனித அந்தோனியார் மகளீர் மகா
வித்தியாலயம், கொழும்பு 03.

- திருமதி. டப்ளியு. கே. எம். ஐ. எஸ். கே. பர்னாந்து
ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்.

- திருமதி. தி. ஜே. போல் அன்ரனி. கலைமாணி
ஓய்வு பெற்ற அதிபர்.

## கத்தோலிக்க ஆலோசகர் குழு

- அதிமேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
  தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய ஆணைக்குழு.(ஆயர் மன்றம்)

- அதிமேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை
  உபதலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய ஆணைக்குழு.(ஆயர் மன்றம்)

- அதிவண. ஐவன் பெரேரா
  தேசிய பணிப்பாளர் - கத்தோலிக்க பாடசாலை.

- அருட்பணி. பியல் ஜானக பெரேரா
  தேசிய பணிப்பாளர் - திருவிவிலிய, மறைக்கல்வி நடுநிலையம்.

- கலாநிதி அருட்பணி. ஹென்றி சில்வா
  விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்

- கலாநிதி. அருட்பணி. ஞானமுத்து ஹெக்ரர் பிலேந்திரன்
  தலைவர்,
  மேற்கத்தேய கலாச்சாரம் மற்றும் கிறிஸ்தவ, இஸ்லாம் கலாச்சார பீடம்,
  யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

- அருட்பணி. கிறெகறி எல். பர்னாந்து O.S.B.
  உதவி பணிப்பாளர், சமய பிரிவு – கல்வி அமைச்சு.

**கணினி அமைப்பு-** செல்வி. தயானா மோசெஸ்

அலுவலக உதவி - திரு. டயஸ் அமரசிங்க
திருமதி. எஸ்.பிரியதர்சினி

## உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதி பணிப்பாளர் நாயகத்தின் செய்த | iv |
| கலைத்திட்டக் குழு | v |
| அறிமுகம் | viii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனை | ix |
| தேசிய இலக்குகள், அடிப்படைத் தேர்ச்சிகள் | x |
| பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | xii |
| பாடத்திட்டம் | xiii |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல் | 1-56 |

## அறிமுகம்

சமயம் என்பது வாழ்க்கை. எனவே சமயத்தை வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாது. அனைத்து சமயங்களினதும் நோக்கம், ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதே ஆகும். இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே இக் கலைத் திட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. இதற்கேற்ப இப் புதிய கலைத் திட்டத்தில் உள்ள தேர்ச்சிகளை மாணவரிடையே உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது.

தேர்ச்சி என்பது அறிவு, திறன்,மனப்பாங்கு, ஆளிடைத்திறன் என்பவற்றை ஒன்றிணைத்த ஒரு வாழ்க்கை முறையாகும்.

கிறிஸ்தவராகிய நாம் ஏற்றுக்கொள்ளும் அன்பை மையமாகக் கொண்ட இயேசுவின் படிப்பினையையே, கல்வித்தத்துவவியலாளர்கள் ஆளிடைத்திறன் என விளக்குகின்றார்கள். எனவே உன்னத ஆசிரியரான நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் படிப்பினைகளை நன்கு அறிந்து, கிறிஸ்தவ மனப்பாங்கை விருத்தியடையச் செய்து திறமை மிக்க அன்பு நிறைந்த ஒரு வாழ்வை கட்டியெழுப்புவதே இப் புதிய கலைத்திட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

கிறிஸ்தவ படிப்பினைகள் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. ஏனெனில் கிறிஸ்தவ நம்பிக்கை, எதிர் நோக்கு, அன்பு என்பன திருவிவிலியத்தையே மையமாகக் கொண்டுள்ளது. ஆகையால் இக் கத்தோலிக்க கலைத்திட்டமும் திருவிவிலியத்துடனே ஆரம்பிக்கின்றது. மேலும் திருத்தந்தை தூய இரண்டாம் யோண் பவுலினால் குறிப்பிட்ட விசேட குழுவினரால் வடிவமைக்கப்பட்ட “கத்தோலிக்க திருமறைக்கல்வி” (Catechism of the Catholic Church) எனும் நூலின் தலைப்பிற்கேற்ப ஏனைய தலைப்புகள் நான்கும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப பின்வரும் ஐந்து தலைப்புகள் இக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கி உள்ளது.

1. திருவிவிலியம்
2. விசுவாசம்
3. அருளடையாளம்
4. பத்துக்கட்டளை
5. செபவாழ்வு

மேற்கூறப்பட்ட தலைப்புகள் ஐந்துக்கேற்ப அமைக்கப்பட்ட ஐந்து தேர்ச்சிகளுடாக, 6-11 வகுப்பு வரையிலான மாணவர் உச்ச பயன் அடைய வேண்டுமென எதிர்ப்பார்க்கப் படுகின்றது. இதன் வழியாக திறமைமிக்க, முதிர்ச்சியடைந்த, செயல்திறன்மிக்க ஒரு கத்தோலிக்க பிரஜையை உருவாக்குவதே நோக்கமாகக் கருதப்படுகின்றது.

அதற்காக 6-9 வகுப்புகளில் அடிப்படை வாழ்க்கை முறையையும், 10-11 வகுப்புகளில் ஒரு முதிர்ச்சி பெற்ற கத்தோலிக்க மாணவனாக செயல்படவும் தேவையான தேர்ச்சிகளை உருவாக்குவது இதன் எதிர்ப்பார்ப்பாகும்.

ஏனெனில் உயர்தர வகுப்புகளில் மிகக் குறைந்தளவு மாணவர்களே கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்கின்றார்கள். எனவே பெரும்பாலான மாணவர்களினது கிறிஸ்தவ கல்வி அறிவு க.பொ.த. (சா/த) கலைத்திட்டத்துடன் வரையறுக்கப்படுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களை மேலும் விருத்தி செய்து, உரிய தேர்ச்சிகளை மாணவர்களிடம் உருவாக்க மாணவர் மைய கல்விச் செயற்பாடுகளை அமைக்க வளவாளராகச் செயற்படுவதே ஆசிரியர்களது கடமையாகும்.

கிறிஸ்தவ விழுமியங்கள் கத்தோலிக்க ஆசிரியரது வாழ்வில் பிரதிபலிக்கப்படுவதை மாணவர்கள் கண்டுணர வேண்டும். எனவே சமயக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்காற்றல் கொண்டவர்களாக் திகழ்வது சாலச் சிறந்தது.

## ஆசிரியர் வழிகாட்டி பாவிப்பதற்கான அறிவுரைகள்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாட பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளை பயன்படுத்துங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாகப் பிரித்து குழு செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினைத் தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும் பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும் பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தைச் செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தைத் தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளைப் பிழையின்றி பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாக பெற்றோர்களுக்கும் முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**சமயத்துறை - கத்தோலிக்க திருமறை**

**தேசிய கல்வி நிறுவகம்.**

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

## 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

## 5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

## 6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

## 7. “கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

மேற்குறிப்பிட்ட தேசிய கல்விக் குறிக்கோள்களும், அடிப்படைத் தேர்ச்சிகளும் இலங்கையின் கல்வி தொடர்பாக தேசிய கொள்கைகள், மற்றும் பிரேரணைகளை உள்ளடங்கிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாத அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்.

## விடயக் குறிக்கோள்

1. தமது வாழ்வை உருவாக்க திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வர்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனைப் படைத்தவரை அறிந்துக் கொள்வர்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வர்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வர்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வர்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பர்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பை பரப்புவர்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனைப் பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவர்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவர்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவர்.
12. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வர்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவர்.
2. இறைவெளிப்பாட்டை தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வர்.
3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வர்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

# பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1..திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர். | 7.1.1 இறைவனுக்காகப் பேசுவர். | **1. இறைவாக்கினர்.**<br>• அறிமுகம்<br>• நபி பிறொவ்படெஸ்ட் ஆகிய சொற்களின் அர்த்தம்<br>• இறைவாக்கினர் என்பவர்கள்.<br>• இறைவாக்கினர்களின் வகை<br>1. இறைவாக்குரைப்போர்<br>நாத்தான், எலியா, எலிசா<br>2. எழுத்து வடிவம் பெற்றோர்<br>(i) பெரிய இறைவாக்கினர் - 3<br>(ii) சிறிய இறைவாக்கினர் - 12 | ● இஸ்ராயேல் இறைவாக்கினர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>● இறைவனின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>● இறைவனுக்காக குரல் கொடுப்பர்.<br>● இறைவனின் செய்திக்குப் பதில் அளிக்க மற்றவர்களைத் தூண்டுவர். | 02 |
| | 7.1.2 பிறருக்கு இறை வார்த்தையை எடுத்துக் கூறுவர். | **2. இறைவாக்குரைப்போர்**<br>• நாத்தான், எலியா, எலிசா போன்றவர்களைப் பற்றிய சிறு விளக்கம். | ● எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் பற்றிய தகவல்களைத் திரட்டுதல்.<br>● இறைவன் ஒருவரை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>● இறைபராமரிப்பை வேண்டித் தினமும் செபிப்பர்.<br>● பிறரை நல்வாழ்வுக்கு இட்டுச் செல்வர். | 02 |
| | 7.1.3 இறை அழைத்தலுக்கு பதில் அளிப்பர். | **3. பெரிய இறைவாக்கினர்.**<br>• பெரிய இறைவாக்கினர் பற்றிய அறிமுகம்<br>• அழைக்கப்பட்ட விதம்<br>• எசாயாவின் அழைப்பு. | ● பெரிய இறைவாக்கினர் பற்றிய தகவல்களைத் திரட்டுதல்.<br>● ஆலயத்தின் கௌரவத்தைப் பாதுகாத்தல் வேண்டு மென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன் வைப்பர்.<br>● தலைமைத்துவப் பொறுப்புக்களைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவர்.<br>● பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குப் பிறரை தைரியப்படுத்துவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.1.4 காலத்தின் தேவைகளை அறிந்து இறைவாக்குப் பணியில் ஈடுபடுவர். | **4. சிறிய இறைவாக்கினர்.**<br>• சிறிய இறைவாக்கினர் பற்றிய அறிமுகம்<br>• ஆமோஸ்<br>• ஒசியா<br>• யோனா | ● சிறிய இறைவாக்கினர் ஆமோஸ், ஓசேயா, யோனாபற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>● நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>● இறைவன் ஒருவரை மட்டுமே ஆராதிப்பர்.<br>● பிறரை மனம் வருந்தலில் ஈடுபடுத்துவர். | 02 |
| 2 இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர். | 7.2.1 இறை அழைத்தலுக்குப் பதிலளித்து வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வர். | **5. ஆபிரகாமின் அழைப்பு (தொ.நூ 12/1-9)**<br>அழைப்பின் தன்மை → தியாகம்; எதிர்கொண்ட சவால்கள். (தொ.நூ 12.˙.1-9)<br>தியாகம் 3 → தாய்நாடு; உறவினர்; தந்தையின் வீடு<br>சவால்கள் 3 → பெரிய இனத்தின் தந்தை; நாடோடி வாழ்வு; அறியாத தேசத்துக்குச் செல்லல்<br>உடன்படிக்கைகள் இரண்டு<br>1. நாட்டைக் கொடுத்தல்.<br>2. இனத்தைப் பெருகச் செய்தல். | ● ஆபிரகாமின் அழைத்தல் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>● சவால்களுக்குப் பயமின்றி முகங்கொடுக்க வேண்டு மென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>● தமது அழைத்தலுக்குக் கீழ்ப்படிவர்.<br>● குழுச் செயற்பாடுகளுக்கு உதவியைப் பெற்றுக் கொடுப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.2.2 உடன்படிக்கை வாழ்வுக்கு நம்பிக்கை உள்ளவராய் இருப்பர். | • 6-ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை (தொ.நூ.15/1 - 21> 17/ 1-14<br>• உடன்படிக்கையின் முக்கிய விடயங்கள் இரண்டு<br>• எண்ணிக்கையற்ற வழிமரபினர் 16/5, 17/5<br>• எண்ணற்ற நாடுகளில் உரிமை 15/21, 17/8<br>• உடன்படிக்கை செய்த முறைகள்.<br>• அடையாளம் - விருத்த சேதனம் ஆபிரகாமின் பெயர் மாற்றமும் அதன் அர்த்தமும். (தொ.நூ 17/5) | • ஆபிரகாமோடு இறைவன் செய்த உடன்படிக்கை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• திருமுழுக்கின் வழியாக நாமும் உடன்படிக்கை வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• உடன்படிக்கை வாழ்வுக்கு எப்போதும் நம்பிக்கையாய் இருப்பர்.<br>• பிறர்க்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவர். | 02 |
| | 7.2.3 பெற்றோருக்கு பணிவுள்ள நல்ல பிள்ளைகளாவர். | **7. ஈசாக்**<br>• பிறப்பு (தொ.நூ 21/1-8 தொ.நூ 22/1)<br>• ஈசாக்கைப் பலிகொடுத்தல் (தொ.நூ 22/1-19)<br>• ஈசாக்குடன் உடனபடிக்கையை புதுப்பித்தல்.<br>• ஈசாக்கின் வாழ்விலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதரிகைகள் (தொ.நூ 26/19- 25) | • "ஈசாக்கு" தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• பிறரோடு சமாதானமாக வாழவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• பெற்றோருக்குப் பணிவுள்ள நல்ல பிள்ளைகளாவர்.<br>• ஒத்துழைப்புடன் செயற்படுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.2.4 சகோதர்களுடன் ஒற்றுமையாக வாழ்வர். | **8. யாக்கோபு**<br>• பிறப்பு (தொ.நூ25/19-26<br>• பெத்தெலில் காட்சி (உடன்படிக்கை புதுப்பித்தல். (தொ.நூ 28/10-22)<br>• பெயர் மாற்றம் பெற்ற இடம் பெனியேலில் காட்சி (தொ.நூ 32/24-30)<br>• ஏசாவுடன் ஒப்புரவு (தொ.நூ 33/1-3) | • யாக்கோப்பு தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• சகோதரர்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• இறைவனின் குரலுக்குப் பதிலளிப்பர்.<br>• பிறரோடு ஒற்மையாக வாழ்வர். | 02 |
| | 7.2.5 அன்றாட வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளும் அழைத்தலுக்கு உரிய முறையில் பதிலளிப்பர். | **9. திருத்தூதர்களின் அழைப்பு**<br>• மீனவர்கள் நால்வரின் அழைப்பு. (மத் 4/18-22)<br>• மத்தேயுவின் அழைப்பு (மத் 9/9-13)<br>• திருத்தூதர்கள் பன்னிருவரின் பெயர்கள். (மத் 10/2-4)<br>• யூதாசுக்குப் பதிலாகமத்தியா தெரிவு செய்யப்படல். (திப 1/12-26)<br>• மறைத்தூதரைப் பணிப்பாக பொறுப்புக்களை கையளித்தல் (மத். 28/ 19-20) | • திருத்துதர்களின் அழைப்புத் தொடர்பான தகவல்களைத் திரட்டுங்கள்.<br>• தமது அழைத்தலுக்கு உரிய முறையில் பதிலளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• இறைவார்த்தையை வாசித்து சிந்திப்பர்.<br>• இறை வார்த்தைக்கு செவிமடுத்தலின் முக்கியத்துவத்தை விளக்குவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3. அருளாடை யாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக் குச் சான்று பகர்வர். | 7.3.1 திருமுழுக்கு வழங்கும் சடங்கு முறையில் அர்த்தத்துடன் பங்குபற்றுவர். | **10. திருமுழுக்கு**<br>• அருளாடையானச் சடங்கை எளிமையாக அறிமுகஞ் செய்தல். (குழந்தைகளின் திருமுழுக்கு)<br>• திருமுழுக்கு அருளாடையாளம் தொடர்பான திருச்சபையின் சட்டகங்கள். ( 862, 857, 865, 867 இல் 1ம் வசனம், 868இல் - 1ம் வசனம் 872) | • திருமுழுக்குத் தொடர்பான தகவல்களைக் கோவைப் படுத்துவர்.<br>• திருமுழுக்கினூடாகப் புதுவாழ்வைப் பெறுகின்றோம் என்பதை ஏற்பர்.<br>• குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கும் சடங்கு ஒன்றினை நடித்துக் காட்டுவர்.<br>• திருமுழுக்கு வழங்கும் சடங்கின் அர்த்தத்துடன் பங்குபற்றுவர்.<br>• திருமுழுக்கு வழிபாடுகளில் அர்த்தமுள்ள முறையில் உதவுவர். | 02 |
| | 7.3.2 மக்களைப் புனிதப்படுத்தும் அருட்பணி-யாளருக்காக செபிப்பர். | **11. குருத்துவம்**<br>• 3 நிலைகள் - தியாக்கோன், குரு, ஆயர்<br>• ஒவ்வொரு நிலைக்குமுரிய பொறுப்புக்கள்.<br>குருக்கள் → மறைமாவட்ட குருக்கள் / துறவறகுருக்கள்<br>என இருவகைப்படும்.<br>• மறைமாவட்ட குருக்கள் - ஆயரின் கீழ்.<br>• துறவறக் குருக்கள் - சபை முதல்வரின் கீழ்<br>• பணிவு தூய்மை என மறை மாவட்டக் குருக்கள் இரண்டு வாக்குறுதிகள் எடுப்பர்.<br>• எளிமை தூய்மை, பணிவு என துறவறக் குருக்கள் மூன்று வார்த்தைப்பாடுகள் கொடுப்பர். | • குருக்கள் தொடர்பான பணிகளைப் பட்டியல்படுத்துவர்.<br>• குருக்களின் பணிகளைப் பாராட்டுவர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• குருக்களுக்காக செபிப்பர்.<br>• குருக்களின் பணிகளில் உதவுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.3.3 துறவற வாழ்வின் மேன்மையை மதிப்பர். | **12. துறவற வாழ்வு**<br>• துறவற வாழ்வின் இரு பிரிவுகள்.<br>- துறவறக் குருக்கள்<br>- துறவிகள்<br>• துறவறக் குருக்கள் உ-ம் :-<br>- அமல மரித்தியாகிகள் சபை<br>- யேசு சபை<br>- ஆசீர்வாதப்பர் சபை<br>- நற்கருணை நாதர்சபை<br><br>துறவிகளின் பிரிவுகள்.<br><br>**அருட்சகோதரர்கள்**<br>-டிலாசால் சபை<br>-மாரிஸ்ட் சகோதரர் சபை<br><br>**அருட்சகோதரிகள்**<br>-அப்போஸ்தலிக் கார்மேல் சபை<br>- திருக்குடும்பம் கன்னியர் சபை<br>- திருத்தூதர் கன்னியர் சபை<br>- திருச்சிலுவை கன்னியர் சபை<br>- டொமினிக்கன் சபை<br>- ஆசீர்வாதப்பர் சபை<br>- இரட்சகர் சபை | • துறவற வாழ்வு பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• துறவற அர்ப்பண வாழ்வு ஓர் இறை அழைப்பு என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• துறவற வாழ்வை மதிப்பர்.<br>• துறவிகளின் பணிகளுக்கு உதவுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.3.4 பொதுநிலை யினருக்குரிய மறைத்தூதுப் பணி சபையில் செயற்பாடுள்ள அங்கத்தவராக இருப்பர் | • இவர்கள் எல்லோரும் ஒரே வார்த்தைப்பாடுகளையே எடுக்கின்றார்கள் - விண்ணகப் பரிசைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். (1 கொரி 9.∴ 24- 27)<br><br>**13. பொது நிலையினரின் அழைப்பு**<br>• பொதுக் குருத்துவமும் - பணிக்குருத்துவமும்<br>• பொதுக் குருத்துவம் - திருமுழுக்கின் மூலம்.<br>• பணிக்குருத்துவம் - குருத்துவத்தின் மூலம்<br>• பொதுக் குருத்துவத்தின் வழியாகப் பெறும் மூவித பணிகள்<br>- போதிக்குப் பணி<br>- புனிதப்படுத்தும்பணி<br>- வழிநடத்தும் பணி<br>• பிள்ளைகள் செயயக்கூடிய இறைவாக்கினர் பணி மேய்ப்புப்பணி, குருத்துவப்பணி, இப்பணிகள்,<br>• பலனுள்ள வகையில் செயலாற்ற உதவும் சபைகள். | • பொதுக்குருத்துவம் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• மூவித பணியில் தரப்படும் பொறுப்புக்களை நிறைவேற்ற விருப்பம் தெரிவிப்பர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• பங்குகளில் ஆர்வத்துடன் பங்கெடுக்க முயற்சிப்பர்.<br>• பங்கிலுள்ள பக்திச் சபைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.3.5 திருக்குடும்பத்தின் முன்மாதிரிகை-யைப் பின்பற்றி வாழ்வர். | **14. திருமணம்**<br>• கிறிஸ்தவ திருமணத்தின் பண்புகள்<br>(i) ஒருமை - (ஒருவனுக்கு ஒருத்தி)<br>(ii) கட்டவிழாமை - (மணமுறிவு இல்லை)<br>• பெற்றோரின் கடமைகள்.<br>• நசரேத்து திருக்குடும்பத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் | • திருமண அருளடையாளம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றி வாழவேண்டும் என்பதை ஏற்பர்.<br>• திருமண அருளடையாளம் தொடர்பாகத் திரட்டிய தகவல்களைக் கொண்டு ஆக்கம் ஒன்றினை முன்வைப்பர்.<br>• சமூகத்தில் முன்மாதிரிகையான குடும்பமாகத் திகழ்வர்.<br>• பெற்றோர் தம் கடமைகளைச் செய்ய ஒத்துழைப்பர். | 02 |
| 4. இறை கட்டளைகளைக் கடைப் பிடித்து அன்பாக வாழ்வர். | 7.4.1 தங்கள் கடமைகள் பொறுப்புக்களை நிறைவாகச் செய்வர். | **15.பெற்றோருக்கு மதிப்பளிப்போம்.**<br>• பத்துக் கட்டளைகளில் 2ஆவது பகுதியின் முதற்கட்டளை அன்பு செய்தலும், கீழ்ப்படிதலும்.<br>- இறைவனுக்கு அடுத்தபடியாக நாம் அன்பு செய்ய வேண்டியவர்கள்- பெற்றோர்கள்.<br>- இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட வாழ்வையும் நம்பிக்கையையும் பெற்றோர் வழியாகவே நாம் பெறுகிறோம்.<br>• இக்கட்ளை வழியாக நாம் கீழ்ப் படிந்து மரியாதை செய்ய வேண்டியவர்கள்.<br>- சமயத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள்,<br>- ஆசிரியர்கள், - முதியோர்.<br>• பெற்றோர், பங்கு, பாடசாலை, நாடு ஆகியவற்றுக்கான பிள்ளைகளின் கடமைகள். | • நான்காம் கட்டளை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• பாடசாலைக்காகத் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டுமென ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வர்.<br>• பெரியோரை மதிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.4.2 உண்மை உள்ளவராக இருப்பர். | **16. பொய்ச் சான்று சொல்லாதிருப்பாயாக**<br>• அனனியா சபிரா (திப.5/1-11 )<br>• வாயிலிருந்து வருவதே மனிதனை மாசுபடுத்துகிறது. (மத் 15/10-12 ,15-20)<br>• பொய்யை விலக்கி உண்மை பேசுங்கள். (எபேசி 4/25 க.தி.ம 2465)<br>• கடவுளின் பிள்ளை/சாத்தானின் பிள்ளை (யோவா 8/44) | • உண்மையுள்ள ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு உதவக்கூடிய விதம் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• உண்மை உள்ளவராக வாழும்போது மனச்சான்றின் குரலுக்குச் செவிமடுக்க இடம் கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• பொய்மை விலக்கி உண்மை பேசுவார்கள்.<br>• சமூகத்திலே ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் இருப்பர். | 02 |
| | 7.4.3 பிறர் சொத்துக்களைப் பாதுகாப்பர். | **17. களவு செய்யாதே**<br>• **7ஆம் கட்டளையால் விலக்கப்பட்டவை**<br>- களவு எடுத்தல்.<br>- அபகரித்தல்.<br>- அநீதியான முறையில் பெறுதல்.<br>- பிறர் சொத்துக்களை அழித்தல்.<br>• **சொத்துக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய முறைகள்.**<br>- நேர்மையான வழியில் உழைத்தல்.<br>- வேலை செய்தல்.<br>- விலை கொடுத்து வாங்குதல். | • 7வது கட்டளையின்படி எவ்வாறு வாவேண்டும் என்பது தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• நேர்மையான முறையில் சொத்துக்களைத் தேடவேண்டும் என்பதை ஏற்றக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• களவு செய்யாதிருப்பர்.<br>• பிறர் உடைமைகளை பாதுகாப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | - பண்டமாற்றுச் செய்தல் (சமமான பெறுமதியில்)<br>- நன்கொடை மூலம்<br>- வாரிசுச் சொத்து<br>• **களவு என்பது பலவந்தமாக, வஞ்சனையாக இலஞ்சமாக பெற்றுக் கொள்ளல் ஆகும்.** | | |
| | 7.4.4 கிடைப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்வர். | **18. பிறர் உடைமையை விரும்பாதே**<br>• 7ஆம் கட்டளை - இதன்வழி நடைபெறும் புறச்செயற்பாடுகள்,<br>• 10ஆம் கட்டளையில் (அகச் செயற்பாடாக மாறும்)<br>• பேராசையின் எண்ணங்கள் பாவமாகும்.<br>• பேராசை என்பது தலையான பாவமாகும். க.தி.ம 2534 - 2540<br>• பேராசையின் எண்ணங்கள் செயற்பாடாக மாறும் (மீக்2:1-2) | • 10வது கட்டளைக்கேற்ப வாழ வேண்டிய வித்தினைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• பேராசையான சிந்தனைகள் செயலாக மாற்றமடையு மென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• கிடைப்பதைக் கொண்டு திருப்திப்படுவர்.<br>• பிறருடைய உடைமைகளைப் பாதுகாப்பார். | 02 |
| 5.செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர். | 7.5.1 முறையாகவும் பக்தியாகவும் செபமாலையைச் சொல்லுவர். | **19. செபமாலைப் பக்தி**<br>• வரலாறு,<br>• மறை உண்மைகள், உரிய நாட்கள்<br>• செபமாலை சொல்லும் ஒழுங்கு முறைகள், அதற்குரிய செபங்கள் | • செபமாலை பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• செபமாலைப் பக்தி எம் வாழ்வைப் பாதுகாக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• தினமும் குடும்பத்தில் செபமாலை சொல்லுவர்.<br>• செபமாலை பக்தியோடு தொடர்பான பங்கிலுள்ள செயற்பாடுகளில் ஊக்கத்துடன் பங்குபற்றுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட |
|---|---|---|---|---|
| | | • ஓ என் இயேசுவே, அத்தியந்த மகிமையுள்ள....., கிருபை தயாபார செபம்,<br>• இச்செயற்பாடுகளை மனப்பாடம் செய்யப் பயிற்றுவித்தல்.<br>• இறந்தோருக்கான செபமாலை<br>• பல்வேறு பிரார்த்தனைகள் (புனித அந்தோனியார், புனித செபஸ்ரியார், புனித யூதா ததேயு) | | |
| | 7.5.2 பயனுள்ள முறையில் ஆலயத் திருவிழாக்களைக் கொண்டாடுவர். | **20. நவநாட்களும், திருவிழாவும்.**<br>• பத்து நாட்களின் பின்னணி<br>• ஆலயம் ஒப்புக் கொடுக்கபபட்ட புனிதர் பற்றிய விளக்கம்.<br>• ஆலயத் திருவிழா நடத்தப் படுவதன் நோக்கம்.<br>• கொடிமரம் ஏற்றுவதன் அர்த்தம்.<br>• திருவிழாக் காலங்களில் ஆன்மீக காரியங்களுக்கு முதலிடம் கொடுத்தல்.<br>• திருவிழாக் காலங்களில் நடைபெறும் நவநாட்களுக்கு, இறைவார்ததைக்கு முதலிடம் கொடுத்தல்.<br>• நம்பிக்கையுடனும், பக்தியுடனும் திருச்சூருப பவனியில் கலந்து கொள்வர். | • ஆலயத்தின் வருடாந்த திருவிழா தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• ஆலயத்தின் திருவிழாக் காலத்தில் உண்மையான ஆன்மீகப் புத்தெழுச்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய காலப்பகுதி என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• திருவிழாக் காலத்தில் தமது வாழ்வில் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • திருவிழாக் காலங்களில் நடைபெறும் தானதருமம் வழங்கும் சடங்குகளை அர்த்தத்துடன் செய்தல்.<br>• மனமாற்றத்துடன் இக்காலத்தைப் பயன்படுத்துதல்.<br>• புனிதர்களின் பரிந்துரையினால் எமக்குக் கிடைக்கும் வரங்கள். | | |
| | 7.5.3 மரியாதையுடன் மாலை ஆராதனை-களில் பங்குகொள்வர். | **21. மாலை ஆராதனையும் நற்கருணை ஆசீரும்**<br>• திருப்புகழ் மாலை பற்றிய அறிமுகம்<br>• மாலை வழிபாட்டு ஒழுங்கு முறை<br>• நற்கருணை வழிபாடும் ஆசீரும், நடைபெறும் சந்தர்ப்பங்கள். | • மாலை ஆராதனை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• மரியாதையுடன் மாலை ஆராதனையில் பங்குபற்ற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• மாலை ஆராதனைக்குரிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• நற்கருணை ஆசீரைப் பெறுவதன் மூலம் இறைவனுடன் ஆழமான உறவைக் கட்டியெழுப்புதல்.<br>• மாலை ஆராதனைச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பங்கு மக்கள் ஒத்துழைப்புடன் செயற்படுவர். | 02 |
| | 7.5.4 தமது துன்பங்களை ஏற்றுக்கொள்ள யேசுவின் துன்பங்களை முன்மாதிரியாகக் கொள்வர். | **22. சிலுவைப் பாதை**<br>• வரலாற்றைச் சுருக்கமாக விளக்குதல்.<br>• 14 நிலைகளை அறிமுகஞ் செய்தல்.<br>• ஒவ்வொரு நிலையினதும் ஒழுங்குமுறை<br>• சிலுவைப் பாதையின் போது சொல்லப்படுகின்ற பதிலுரைகள். | • சிலுவைப்பாதை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• சிலுவைப்பாதையில் பங்கேற்பதன் வழியாக இயேசுவின் பாடுகளில் பங்கேற்கலாம் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• தவக்காலத்தில் இயலமான போதெல்லாம் சிலுவைப் பாதையில் பக்தியோடு பங்கேற்பர்.<br>• சிலுவைப்பாதையை ஒழுங்கு செய்வதில் ஒத்துழைப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.5.5 திருமணித்தி-யாலத்தில் பக்தியுடன் பங்குபற்றுவர். | **23. திருமணித்தியாலம்.**<br>• திருமணித்தியாலத்தின் வரலாறு<br>• நடாத்த வேண்டிய சந்தர்ப்பம்<br>• நடாத்த வேண்டிய முறை<br>• நடத்துவதன் நோக்கம்.<br>• தொடக்கால திருமணித்தியால த்தின் ஒழுங்குமுறை | • திருமணித்தியாலம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• பக்தியுடன் திருமணித்தியாலத்தில் பங்கு பற்றுவதன் வழியாக இயேசுவின் வேதனைகளில் நாமும் பங்கு காரர்களாக முடியும் என்பதை ஏற்றுக் கொளவர்.<br>• திருமணித்தியாலம் பற்றிய சிறு கைநூல் ஒன்றைத் தயாரிப்பர்.<br>• இயலுமானவரை திருமணித்தியாலத்தில் பங்கேற்பர்.<br>• திருமணித்தியாலத்தில் பிறரையும் பங்கேற்கச் செய்வர். | 02 |
| | 7.5.6 நற்கருணை ஆண்டவருக்கு உரிய மரியாதை செலுத்துவர். | **24. நற்கருணை ஆண்டவரைச் சந்தித்தலும், நற்கருணைப் பவனியும்.**<br>• நற்கருணை ஆண்டவரைச் சந்தித்தலின் நோக்கம்.<br>• நற்கருணை சந்திப்பு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள்.<br>• நற்கருணைப் பவனியின் நோக்கம்<br>• நற்கருணைப்பவனி நடைபெறும் சந்தர்ப்பங்கள்.<br>• நற்கருணைப் பவனியில் பங்கு பற்ற வேண்டியமுறை நற்கருணைப்பவனி நடைபெறும் ஒழுங்குமுறை<br>• நற்கருணைப் பவனியில் பங்கு பற்றுவதற்கான ஆயத்தம்.<br>• நற்கருணை எழுந்தேற்றம் செய்திருக்கும் ஆலயத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறை | • நற்கருணை ஆண்டவரை சந்தித்தலும் நற்கருணைப் பவனியும் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• இயலுமான எல்லாச் சந்தர்ப்பத்திலும் நற்கருணை ஆண்டவரைச் சந்திக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• நற்கருணை ஆண்டவரைச் சந்திப்பதன் மூலம் ஆன்மாவில் புத்துயிரைப் பெறுகின்றனர்.<br>• நற்கருணைப் பவனியை ஒழுங்கு செய்யும் போது ஒத்துழைப்பு வழங்குவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.5.7 தகுதியான ஆயத்தத்தோடு திருயாத்திரைகளில் பங்கேற்பர். | **25. திருயாத்திரை**<br>• திருயாத்திரை செல்வதன் நோக்கம்.<br>• திருயாத்திரை மேற்கொள்ள வேண்டிய முறைகள்.<br>• திருத்தலங்களில் நடந்து கொள்ளவேண்டிய முறைகளும், ஆடையணிகளும்<br>• இலங்கையில் முக்கிய திருத் தலங்களும் அவை தொடர்பான தகவல்களும் (மடு தலவில, தேவத்தை, மாத்தறை)<br>• வெளிநாடுகளில் உள்ள முக்கிய திருத்தலங்களும் அவைதொடர்பான தகவல்களும் (புனித பூமி, பதுவை, கோவா, இந்தியா) | • திருயாத்திரை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• திருயாத்திரை செல்லும் போது அடக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திருத்தலங்கள் சிலவற்றின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட சிறு கைநூல் ஒன்றினைத் தயாரிப்பர்.<br>• திருப்பலி, பக்தி முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் ஆன்மாவில் புத்துயிரைப் பெறுகின்றனர்.<br>• திருத்தலங்களில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவர். | 02 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : இறைவனுக்காகப் பேசுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- இஸ்ராயேல் இறைவாக்கினர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- இறைவனின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- இறைவனுக்காக குரல் கொடுப்பர்.
- இறைவனின் செய்திக்குப் பதில் அளிக்க மற்றவர்களைத் தூண்டுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

படிமுறை 1

- வெளி நாட்டுத் தூதுவராக அனுப்பப்பட்டுள்ள ஒருவரின் பொறுப்புக்களையும் கடமைகளையும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.
  - நாட்டுக்காகப் பேசுதல்.
- இறைவனைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் பேசுவதற்கும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறைவாக்கினர் அனுப்பப்பட்டனர்.
- மாணவர்களுக்குத் தெரிந்த சில இறைவாக்கினர்கள் பற்றிக் கேட்டறிதல்.

(15 நிமிடங்கள்)

படிமுறை 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

படிமுறை 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - எபிரேய மொழியில் ''நபி''
  - கிரேக்க மொழியில் ''ப்றொபேராஸ்''
  - இச்சொற்களின் அர்த்தம் ''இன்னொருவருக்காகப் பேசுபவர்''
  - எனவே இறைவாக்கினர் என்பவர் இறைவனுக்காகப் பேசுபவராவர்.

  - இறைவாக்கினர்களை இரு வகையாகப் பிரிக்கலாம்
    1. எழுத்து வடிவம் பெறாதோர்: பழைய ஏற்பாட்டில் இவர்கள் எழுதிய நூல்கள் இல்லையெனினும் இவர்களது வார்த்தைகளும் செயல்களும் சாமுவேல், அரசர்கள் ஆகிய நூல்களில் உள்ளன. நாத்தான், எலியா, எலிசா போன்றோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் பழைய ஏற்பாட்டில் இவர்கள் பற்றிய நூல்கள் உள்ளன. இவர்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.
   i. பெரிய இறைவாக்கினர் மூவர் எசாயா, எரேமியா, எசேக்கியேல் என்போர்.
   ii சிறிய இறைவாக்கினர் 12. ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபகூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி என்போர்.

- இஸ்ராயேல் இறைவாக்கினர்கள் இறைவனுக்காகப் பேசியதைப்போன்று கிறிஸ்தவர்கள் அனைவரும் இறைவனுக்காகப் பேசுவதற்கான அழைப்பினைப் பெற்றுள்ளனர்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

- பாடநூலின் முதலாவது பாடத்தை வாசித்து இஸ்ராயேல் இறைவாக்கினர் பற்றி ஆக்கமாக முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல் :**

குடும்பத்தில் ஒருவர் மற்றவர்க்குச் சரியான வழியில் செல்வதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : பிறருக்கு இறைவார்த்தையை எடுத்துக்கூறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- இறைவன் ஒருவரை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- இறைபராமரிப்பை வேண்டித் தினமும் செபிப்பர்.
- பிறரை நல்வாழ்வுக்கு இட்டுச் செல்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- ஒரு செய்தியினைக் கேட்பதிலும் அதனை வாசித்து விளங்கிக் கொள்வதிலும் உள்ள வேறுபாடு.
  - வாசிக்க இயலுமானாலும் இயலாவிட்டாலும் எழுத்தறிவு இருப்பினும் இல்லாவிட்டாலும் கேட்கும் ஒரு செய்தியினை விளங்கிக் கொள்ள முடியும். (நேரடித் தொடர்பாடல் காரணமாக)
  - ஒன்றை வாசித்து விளக்கிக் கொள்வதற்கு எழுத்தறிவு கட்டாயமாகத் தேவைப்படுகின்றது.

- இறைவனுக்காகப் பேசும் ஒருவர் இறைவாக்கினர் எனப்படுவர்.
- எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் இப்பணியை நன்றாக நிறைவேற்றியுள்ளனர்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - இறைவாக்கினர் நாத்தான்
    - தாவீது அரசனின் பாவம் (2 சாமுவேல் 11:1-5)
    - இறைவாக்கினர் நாத்தான் கூறிய உவமை (2 சாமுவேல் 12:1-7)
    - நாமும் அநீதியாக நடப்பவர்களை, சாதுரியமான வழிமுறைகளைக் கையாண்டு தவறுகளைக் காட்டி நல்வழிக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

  - இறைவாக்கினர் எலியா
    - பஞ்சத்தின்போது இறை பராமரிப்பு (1 அரசர் 17:1-15)
    - கார்மேல் மலையில் பலி (1 அரசர்கள் 18:21-38)
    - பஞ்சத்தின் முடிவு (1 அரசர்கள் 18: 41-46)
    - அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை வேண்டி செபித்தல் வேண்டும்.

- இறைவாக்கினர் எலிசா
    - இறைவாக்கினர் எலிசாவின் அழைப்பு (1 அரசர்கள் 19: 19-21)
    - நாமான் நலம் பெறுதல் (2 அரசர்கள் 5: 1-17)
    - செபிப்பதால் நலம் பெறுதலை அனுபவிக்க முடியும்
    - இறைவன் ஒருவரை மட்டுமே எப்பொழுதும் ஆராதிக்க வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- உங்கள் குழு பெற்றுள்ள திருவிவிலியப் பகுதியை புரட்டி வாசிக்கவும்.
- அத்திருவிவிலியப் பகுதியிலுருந்து முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை ஆக்கங்களாக வகுப்பில் முன்வைக்கவும்.

- குழு 1: இறைவாக்கினர் நாத்தான்
    - 2 சாமுவேல் 11: 1-5
    - 2 சாமுவேல் 12: 1-7
- குழு 2: இறைவாக்கினர் எலியா
    - 1 அரசர்கள் 17: 1-15
    - 1 அரசர்கள் 18: 21-38
    - 1 அரசர்கள் 18: 41-46
- குழு 3: இறைவாக்கினர் எலிசா
    - 1 அரசர்கள் 19: 19-21
    - 2 அரசர்கள் 5: 1-17

**வீட்டுச் சூழல் :**

சந்தர்ப்பத்துக்கேற்ப ஞானத்தோடு செயற்படுங்கள்.

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : இறை அழைத்தலுக்குப் பதில் அளிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- பெரிய இறைவாக்கினர் பற்றிய தகவல்களைத் திரட்டுதல்.
- ஆலயத்தின் கௌரவத்தைப் பாதுகாத்தல் வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன் வைப்பர்.
- தலைமைத்துவக் கடமைகளைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவர்.
- பொறுப்புக்களை நிறைவேற்றி பிறர்க்கு உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- எதிர்பாராத விதமாக வகுப்பில் மாணவர் தலைவர் பதவிக்கு / சங்கமொன்றின் நிர்வாக உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படும் போது ஏற்படும் மன உணர்வினை கலந்துரையாடுக.
  - பயம்
  - உறுதியற்ற தன்மை
  - பொறுப்புக்களை ஏற்பதற்குச் சாக்கு போக்குச் சொல்லுதல்
  - பொறுப்புக்களை ஏற்க மறுத்தல்
- இறைவாக்கினரை அழைக்கும் போதும் இவ்வாறான நிலயைக் காணலாம்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.
  - இறைவாக்கினர் எசாயா
    - பெயரின் அர்த்தம்: இறைவன் மீட்பு அளிப்பவர்.
    - கி.மு 8ஆம் நூற்றாண்டில் எருசலேமில் வாழ்ந்த ‘‘எசாயாவின்’’ பெயரில் இந்நூல் அழைக்கப்படுகிறது.
    - எருசலேம் எசாயாவின் தந்தை: ஆமோஸ்.
  - இறைவாக்கினர் எரேமியா
    - பெயரின் அர்த்தம்: இறைவனால் உயர்த்தப்பட்டவர்.
    - கி.மு 7-6 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இறைவாக்கினர்.
    - இஸ்ராயேல் மக்களின் பாவம், வேற்றுத் தெய்வங்களை வணங்குவதனாலே ஏற்படப் போகின்ற தீமை தொடர்பான அழிவுகளை உணர்த்துதல்.
    - இறைவாக்கினர் எரேமியாவின் செய்தியினை செவிமடுக்காதமையால் பாபிலோனியப் பேரரசன் வருகை தந்து, எருசலேமையும், திருக்கோவிலையும் அழித்து, இஸ்ராயேலரை அடிமைகளாகப் பாபிலோனியாவுக்குக் கொண்டு சென்றார்.

- இறைவாக்கினர் எசேக்கியேல்
    - பெயரின் அர்த்தம்: இறைவன் மீட்கிறார்.
    - கி.மு 6ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த இறைவாக்கினர்.
    - பாபிலோனியாவில் நாடுகடத்தப்பட்டிருந்தபோது இறைவனின் செய்தி அறிவிக்கப்பட்டது.

- எசாயா இறைவாக்கினரின் அழைப்பு (6: 1-4)
    1. ஆண்டவர் அரியணையில் அமர்ந்திருத்தல். அவரது தொங்கலாடை கோவிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேல் சேராபீன்கள் சூழ்ந்து நின்றனர். ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன. இரு இறக்கைகளினால் முகத்தையும், இரு இறக்கைகளினால் கால்களையும் மூடிக்கொண்டு மிகுதி இரு இறக்கைகளினால் பறந்தன. படைகளின் ஆண்டவர் தூயவர், அவரது மாட்சி மண்ணுலகில் நிறைந்துள்ளது என உரத்த குரலில் கூறின. இக்குரல் ஒலியால் கோவிலின் அடித்தளங்கள் அசைந்தன.
    2. பணியை ஏற்கத் தயங்குதல்: எசாயா 6:5 தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட, மனிதன் நான், தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான், துரதிஷ்டமுள்ளவன்.
    3. எசாயா 6:6-7 சேராபீன்களில் ஒருவர் குரட்டினால் பீடத்திலுள்ள நெருப்புப் பொறி ஒன்றை எடுத்து இறைவாக்கினரின் அருகில் சென்று நெருப்புப் பொறியால் உதடுகளைத் தொட்டு ‘‘உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது” எனக் கூறல்.
    4. எசாயா 6:8அ “யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?” எனும் இறைவனின் குரல் கேட்டல்.
    5. எசாயா 6:8ஆ ‘‘இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” எனக் கூறல்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாடநூலின் மூன்றாம் பாடத்தை வாசிக்கவும்
- நீங்கள் பெற்றுள்ள தலைப்புத் தொடர்பான ஆக்கமொன்றை முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.
    - குழு 1: இறைவாக்கினர் எசாயா பற்றிய அறிமுகமும், அழைப்பும்.
    - குழு 2: இறைவாக்கினர் எரேமியா பற்றிய அறிமுகமும், எசாயாவின் அழைப்பும்.
    - குழு 3: இறைவாக்கினர் எசேக்கியேல் பற்றிய அறிமுகமும், எசாயாவின் அழைப்பும்.

**வீட்டுச் சூழல் :**

பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : காலத்தின் தேவையை அறிந்து இறைவாக்குப் பணியில் ஈடுபடுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- சிறிய இறைவாக்கினர் ஆமோஸ், ஓசேயா, யோனா பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- இறைவன் ஒருவரை மட்டுமே ஆராதிப்பர்.
- பிறரை மனம் மாற்றத்திற்கு இட்டுச் செல்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- பல்வேறு சமூக அநீதிகள் தொடர்பாகப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ள தலைப்புகளை போஸ்டர் ஒன்றின் மூலம் வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அதனைப் பற்றிய மாணவரது கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- கிறிஸ்தவர்கள் என்றமட்டில் இவ்வாறான அநீதிகளின் முன் மௌனமாயிருப்பது எந்தளவுக்குப் பொருத்தமுடையதென்பதைக் கேட்டறியுங்கள்.
- சமூக அநீதிகளின்முன் குரல் எழுப்பிய பழைய ஏற்பாட்டு நபர்கள் பற்றிக் கேட்டறியுங்கள். (இஸ்ராயேல் இறைவாக்கினர்)

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - இறைவாக்கினர் ஆமோஸ்
    - கி.மு 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இறைவாக்கினர்.
    - ஊர் : தெக்கோவா
    - இவர் அத்திமரம் வளர்ப்பவர் மேய்ப்பர்.
    - இவருடைய செய்தியின் முக்கிய கருப்பொருள்: சமூக நீதி
    - ‘‘சமூக நீதியின் இறைவாக்கினர்’’ என அழைக்கப்படுகின்றார்.
    - எப்போதும் நீதியாக வாழ்ந்து, சமூக அநீதியின் முன் குரல் எழுப்புவது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.

  - இறைவாக்கினர் ஓசேயா
    - கி.மு 8வது நூற்றாண்டில் வாழ்ந்த இறைவாக்கினர்.

- இவருடைய திருமண வாழ்வு ஒரு இறைவாக்குச் செய்தியாகும்.
- இவரைத் திருமணம் செய்த கோமோர் ஒரு விலைமாது.
- ஓசேயா அவளை மனம்வருந்தும்படி அழைத்து மன்னிப்பும் அளித்தார்.
- இதிலிருந்து வரும் செய்தி யாதெனில் இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரை மறந்து வேற்றுத் தெய்வங்கள் மேல் பற்றுக் கொண்டு அவற்றை வழிபட்டனர்.
- இறைவன் ஒருவரை மட்டுமே நாமும் ஆராதித்து அவர் ஒருவருக்கு மட்டுமே பணி செய்ய வேண்டும்.

- இறைவாக்கினர் யோனா
  - கி.மு 8வது நூற்றாண்டில் வாழ்ந்த இறைவாக்கினர்.
  - யோனாவின் அழைப்பு என்னவெனில் தமது இனத்தின் எதிரிகள் வாழ்ந்த நினிவேக்குச் சென்று மனமாற்றத்துக்காக மக்களை அழைப்பதாகும்.
  - எனினும் யோனா தனது அழைப்பை ஏற்காது தர்சீசுக்குத் தப்பியோடினார்.
  - இவர் சென்ற கப்பல் புயலில் அகப்பட்டது.
  - புயலுக்குக் காரணமான ஆள் யாரெனக் கண்டுபிடிக்கச் சீட்டுப் போட்டார்கள்.
  - சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தது.
  - இறைவாக்கினர் யோனா தனது பிழையைக் கப்பலில் இருந்தவர்களுக்குக் கூறினார்.
  - புயல் மென்மேலும் அதிகரிக்கவே கப்பலில் இருந்தவர்களின் விருப்பத்திற்கு மாறாக இறைவாக்கினர் யோனா கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரை கடலில் எறிந்தார்கள்.
  - இறைவாக்கினர் யோனாவை ஒரு மீன் விழுங்கிற்று. மூன்று நாட்களின் பின் மீன் நினிவேயில் அவரைக் கக்கியது.
  - இறைவாக்கினர் யோனா நினிவேயின் மக்களை மனம் மாறும்படி அழைத்தார்.
  - மக்கள் மனமாற்றத்துக்குள்ளாகி நோன்பிருந்து செபித்தார்கள்.
  - இறைவனின் மன்னிப்பு அவர்களுக்குக் கிடைத்தது.
  - நாமும் எமது பாவங்களுக்கு மனம்வருந்தி, மீண்டும் பாவம் செய்வதில்லை என உறுதிபூண்டு ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற வேண்டும்.
  - தீமையில் வாழ்கின்றவர்களுக்கு சரியான வழியைக் கூறி மனமாற்றத்திற்கு அழைக்க வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- குழு 1: இறைவாக்கினர் ஆமோஸ்
  - திருவிவிலியத்தைப் புரட்டி இறைவாக்கினர் ஆமோஸ் தொடர்பாக உள்ள அறிமுகத்தை வாசித்து இவரைப் பற்றி ஆக்கமொன்றை முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

- குழு 2: இறைவாக்கினர் ஓசேயா
    - திருவிவிலியத்தைப் புரட்டி இறைவாக்கினர் ஓசேயா தொடர்பாக உள்ள அறிமுகத்தை வாசித்து இவரைப் பற்றி ஆக்கமொன்றை முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

- குழு 3: இறைவாக்கினர் யோனா
    - திருவிவிலியத்தைப் புரட்டி இறைவாக்கினர் யோனா தொடர்பாக உள்ள அறிமுகத்தை வாசித்து இவரைப் பற்றி ஆக்கமொன்றை முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல் :**

பிள்ளைகளுக்கு தண்டனை கொடுக்காமல் மனமாற்றத்திற்கு அழையுங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : இறை அழைத்தலுக்குப் பதிலளித்து வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- ஆபிரகாமின் அழைத்தல் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- சவால்களுக்குப் பயமின்றி முகங்கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- தமது அழைத்தலுக்குக் கீழ்ப்படிவர்.
- குழுச் செயற்பாடுகளுக்கு உதவியைப் பெற்றுக் கொடுப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- பல்வேறு அழைத்தல்களைப் பெற்றுள்ள நபர்களின் போஸ்டர் ஒன்றினை முன்வைத்து அது தொர்பான கருத்துக்களைக் கூறும்படி மாணவர்களை ஒழுங்குபடுத்துங்கள்.
- இறைவன் பல்வேறு நபர்களை பல்வேறு பணிகளுக்காக அழைத்துள்ளார்.
- மீட்பரை அனுப்புவதற்கான முதற்படியாக ஆபிரகாம் அழைக்கப்பட்டார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - ஆபிரகாமின் அழைப்பு (தொடக்கநூல் 12: 1 - 9)
  - ஆபிரகாமின் அழைப்பில் இரு பண்கள் உள.

    1. தியாகம் 2. சவால்கள்
  - ஆபிரகாம் தியாகம் செய்த விடயங்கள் 3 ஆகும்.

    1. தாய் நாடு 2. உறவினர் 3. தந்தையின் வீடு
  - ஆபிரகாம் முகம் கொடுத்த சவால்கள் 3 ஆகும்.
    1. பெரிய இனத்தின் தந்தையாகுதல்.
    2. நாடோடியாக வாழ நேரிடல்.
    3. அறியாத தேசத்துக்குச் செல்லல்.
  - இறைவன் ஆபிரகாமுக்கு இரு வாக்குறுதிகளைக் கொடுத்தார்.
    1. ஆபிரகாமின் வழியாக ஒரு பெரிய இனத்தை உருவாக்கல்.
    2. ஆபிரகாமின் பரம்பரைக்கு நாட்டைக் கொடுத்தல்.

- ஆபிரகாமின் அழைப்பின் வழியாக எடுக்கக் கூடிய முன்மாதிரிகைகள்.
    - இறைவனில் முழுமையான நம்பிக்கை வைத்துச் செயற்பட வேண்டும்.
    - எமது வாழ்க்கைப் பயணத்திலே பல்வேறு விடயங்களைத் தியாகம் செய்ய நேரிடல்.
    - எம்மை எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல் வேண்டும்.
    - இறைவனால் நாம் பெறுகின்ற அழைத்தல்களுக்குக் கீழ்ப்படிதலோடு வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் போட் 1, பல்வேறு தாள்கள், 1 பிளட்டினம்,
- பல்வேறு அழைத்தல்களைப் பெற்றுள்ள ஆட்களின் படங்கள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினைக் கணிப்பிடக்கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- குழு 1: (தொடக்கநூல் 12: 1 - 9) வாசித்து ஆபிரகாம் தியாகம் செய்த விடயங்கள் மூன்றையும், முகங்கொடுத்த சவால்கள் மூன்றையும் போஸ்டர் ஒன்றின் வழியாக முன்வைக்கவும்.

- குழு 2: (தொடக்கநூல் 12: 1 - 9) வாசித்து ஆபிரகாமுடன் இறைவன் செய்த உடன்படிக்கைகள் இரண்டையும் போஸ்டர் ஒன்றின் வழியாக முன்வைக்கவும்.

**வீட்டுச் சூழல் :**

சவால்களுக்கு முகங்கொடுக்கப் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : உடன்படிக்கை வாழ்வுக்கு நம்பிக்கை உள்ளவராய் இருப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- ஆபிரகாமோடு இறைவன் செய்த உடன்படிக்கை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- திருமுழுக்கின் வழியாக நாமும் உடன்படிக்கை வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- உடன்படிக்கை வாழ்வுக்கு எப்போதும் நம்பிக்கையாய் இருப்பர்.
- பிறர்க்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ஐச் செயற்படுத்திக் கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடியதாகக் கலந்துரையாடலை நடத்துங்கள்.
- பெற்றோர் தேவமணியுடன் செய்த வாக்குறுதி.
- தேவமணி பெற்றோருடன் செய்த வாக்குறுதி.
- நவீன உலகில் பல உடன்படிக்கைகள் உள்ளன. திருமண உடன்படிக்கை, அமைதி உடன்படிக்கை, வர்த்தக உடன்படிக்கை
- உடன்படிக்கையொன்றைச் செய்த பின் அதனை நிறைவேற்ற வேண்டும்.
- மனிதர்களுக்கிடையில் செய்யப்படும் உடன்படிக்கைகளை விட இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் செய்யப்படும் உடன்படிக்கை சிறப்பானதாகும்.
- உடன்படிக்கையை இறைவனே ஆரம்பிப்பவர்.
- உடன்படிக்கையை வெளிப்படுத்துபவரும் இறைவனே.
- இறைவன் தாம் செய்த உடன்படிக்கையின் வாக்குறுதியை நிறைவேற்றுகிறார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

- ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை (தொடக்கநூல் 15:1-21, 17:1-4) உடன்படிக்கையின் முக்கிய விடயங்கள் இரண்டு.
  1. எண்ணிக்கையற்ற வழிமரபினர் (தொடக்கநூல் 15: 5, 17: 6)
  2. எண்ணற்ற நாடுகளின் உரிமை (தொடக்கநூல் 15: 21, 17: 8)
- உடன்படிக்கை செய்த முறை
  உடன்படிக்கையின் அடையாளம் (விருத்தசேதனம்) (தொடக்கநூல் 17: 10 - 14)
- ஆபிராமின் பெயர் மாற்றமும் அதன் அர்த்தமும் (தொடக்கநூல் 17: 5)

- பெயர் மாற்றத்தின் வழியாக அவருடைய புது வாழ்வும் நிலையும் காட்டப்படுகின்றது.
- நாம் திருமுழுக்குப் பெறுகின்ற போது கிறிஸ்தவப் பெயர் ஒன்றைப் பெறுகின்றோம்.
- திருமுழுக்கின் வழியாக நாம் உடன்படிக்கை வாழ்வுக்குள் பிரவேசிக்கின்றோம்.
- திருமுழுக்கின் உடன்படிக்கைக் கேற்ப நாம் வாழ வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் போட், டிமயின், பிளட்டினம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்பக் கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக்கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

- குழு 1: தொடக்கநூல் 15:1-21, 17:1-14 ஐ வாசித்து ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை ஆக்கமாக முன்வையுங்கள்.
- குழு 2: தொடக்கநூல் 17:1-14 ஐ வாசித்து உடன்படிக்கை செய்த விதத்தை ஆக்கமாக முன்வையுங்கள்.
- குழு 3: தொடக்கநூல் 17: 1-5 ஐ வாசித்து ஆபிரகாமின் பெயர் மாற்றத்தையும் அதன் அர்த்தத்தையும் போஸ்டர் ஒன்றின் வழியாக முன்வையுங்கள்.

### இணைப்பு 2 உடன்படிக்கை வாழ்வு

(தேவமணியின் கதையை மாணவருக்கு கதையொன்று சொல்லுவதைப்போல் சொல்லுங்கள்)

தேவமணி மிகவும் சிறுபிள்ளைத்தனமான செல்லமான ஒரு பிள்ளையாவாள். அவளுக்குப் பெற்றோரின் அன்பு எப்பொழுதும் கிடைத்தது. பெற்றோர் அவளுடைய சிறுபிள்ளைத்தனமான வாழ்க்கையைப் பற்றி கவலையடைந்தனர். அவள் தனது கல்விச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தவில்லை. பெற்றோர் இதனைப் பற்றி அவளோடு கதைக்க எண்ணினர். அவளுடைய தவறானசெயற்பாடுகளை எடுத்துரைத்த பெற்றோர், அதிலிருந்து விடுபடுதல் நல்வாழ்வொன்றுக்கான அறிவுரைகளை அன்போடு எடுத்துரைத்தனர். பின்னர் அவர்கள் அவளை வீட்டிலுள்ள திருச்சொரூபத்துக்கண்டையில் அழைத்துச் சென்று அவளுடைய வாழ்க்கையை மாற்றியமைப்பதாக வாக்குறுதி செய்து கொண்டனர். சிறிது காலத்துக்குப்பின் தமது மகளின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கண்டனர். அவள் சமயத்தில் ஈடுபாடுடையவளாகவும் நற்குணங்கள் நிறைந்தவளாகவும், தனது கல்விச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துபவளாகவும் காணப்பட்டாள். இதனைக் கண்ட பெற்றார் மகிழ்ச்சியடைந்தனர். இறைவனுக்கும் பெற்றோருக்கும் முன்னிலையில் அவள் கொடுத்த வாக்குறுதியை அவ்வாறே நிறைவேற்றுவதற்காக எப்பொழுதும் முயன்று வந்தாள். தேவமணி எல்லோரது உள்ளத்தைக் கவர்ந்த முன்மாதிரிகையான பிள்ளையானாள்.

**வீட்டுச் சூழல் :**

பிள்ளைகளுக்கு கிறிஸ்தவப் பெயர்களை வையுங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : பெற்றோருக்குப் பணிவுள்ள நல்ல பிள்ளைகளாவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- "ஈசாக்கு" தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- பிறரோடு சமாதானமாக வாழவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- பெற்றோருக்குப் பணிவுள்ள நல்ல பிள்ளைகளாவர்.
- ஒத்துழைப்புடன் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- ஈசாக் பலியிடப்படுகின்ற ஒரு படத்தை மாணவர்களுக்கு முன்வைத்துக் கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக் கொணரக் கூடியதாகக் கலந்துரையாடலை நடத்துங்கள்.
- ஈசாக்கின் பெற்றோர்.
- ஆபிரகாமும், சாராவும் முதிர்ந்த வயதில் ஈசாக்கைப் பெற்றெடுத்தனர்.
- ஈசாக்கைப் பலியிடும்படி இறைவன் கூறுகிறார்.
- இறைவன் ஆட்டுக்கிடாயைக் கொடுத்து ஈசாக்கை மீட்டுக் கொள்கிறார்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

- ஈசாக்கின் பிறப்பு (தொடக்கநூல் 21: 1 - 8)
- ஈசாக் பலியிடப்படல் (தொடக்கநூல் 22: 1 - 19)
- ஈசாக்கின் வழியாக உடன்டிக்கை புதுப்பிக்கப்படல். (தொடக்கநூல் 22: 19 - 25)
- ஈசாக்கின் வாழ்க்கையிலிருந்து பெறக்கூடிய முன்மாதிரிகைகள்.
  - பெற்றோருக்கு பணிவுள்ள நல்ல பிள்ளையாக இருத்தல்.
  - பெற்றோருக்குச் செவிமடுத்தல்.
  - பிறருடன் ஒற்றுமையாக வாழுதல்
  - இறைவனிடம் நம்பிக்கையோடு செபித்தல்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் போட், டிமையின், பிளட்டினம்
- இணைப்பு 1
- ஈசாக் பலியிடப்படும் ஒரு படம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினைக் கணிப்பிடக்கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- குழு 1: தொடக்கநூல் 21:1-8 வாசித்து ஈசாக்கின் பிறப்பைப் பற்றி ஆக்கமொன்றினை முன்வையுங்கள்.
- குழு 2: தொடக்கநூல் 26:1-14 வாசித்து ஈசாக் பலியிடப்பட கொண்டு செல்லப்பட்டதை நடித்துக் காட்டுங்கள்.
- குழு 3: தொடக்கநூல் 26: 19- 25 ஈசாக்கின் வழியாக உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டதை ஓர் ஆக்கமாக முன்வைக்கவும்.

**வீட்டுச் சூழல் :**

வாழ்க்கையில் எதிர் கொள்ளும் துன்பதுயரங்களைப் பொறுமையோடு சகித்துக் கொள்வதற்குப் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : சகோதரர்களுடன் ஒற்றுமையாக வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- யாக்கோப்பு தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- சகோதரர்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- இறைவனின் குரலுக்குப் பதிலளிப்பர்.
- பிறரோடு ஒற்மையாக வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ஐச் செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக் கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.
- யாக்கோபு தன் சகோதரனின் ஆசீரை உணவைக் கொடுத்து கபடமாகப் பெறல்.
- கபடத்தன்மை ஒரு நன்னடத்தையல்ல.
- பயன் கருதாது பிறர்க்கு உதவுதல்.
- பிறருக்கு உதவும் போது நிபந்தனைகள் விதிக்கக் கூடாது.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

- யாக்கோப்புவின் பிறப்பு (தொடக்கநூல் 25: 19 - 26)
- பெத்தேலில் கனவு (தொடக்கநூல் 28: 10 - 22)
  - யாக்கோபு கரானை நோக்கிச் செல்லுதல்.
  - கல்லின் மேல் படுத்து உறங்குகையில் புதுமையான ஒரு கனவு காணல்.
  - நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணி. அதன் நுனி வானத்தைத் தொட்டது.
  - கடவுளின் தூதர் அதில் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர்.
  - ஆண்டவர் அதற்கு மேல் நின்று கொண்டு யாக்கோபுவை நோக்கி, ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை யாக்கோபுவின் வழியாக முன்னெடுத்துச் செல்லுவதாகக் கூறுகிறார்.

- பெனியேலில் காட்சி (தொடக்கநூல் 32: 24 - 30)
- யாக்கோப்புவோடு ஓர் ஆடவர் பொழுது விடியுமட்டும் போரிடல்.
- ஆசி பெற்ற பின்னரே அந்த ஆடவரைப் போகவிடல்.

- இதுவரை யாக்கோபு என அழைக்கப்பட்டவர் இப்பொழுது "இஸ்ராயேல்" என அழைக்கப்படல்.
- யாக்கோபு ஏசாவோடு ஒற்றுமையாதல். (தொடக்கநூல் 33: 1 - 3) இப்பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள்.
  - தனது தவறுகளை ஏற்றுக் கொண்டு மன்னிப்பைப் பெற வேண்டும்.
  - மன்னிப்பளிப்பது மிக உயர்ந்த பண்பாகும்.
  - தனக்குத் தவறிழைத்தவர்களுக்கு மன்னிப்பளிக்க வேண்டும்.
  - வாய்ச்சொல்லால் மன்னிப்பதல்ல, அதனைச் செயலில் நிரூபிக்க வேண்டும்.
  - சகோதரனோடு ஒற்றுமையாக வாழ வேண்டும்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு
- பிரிஸ்டல் போட் 1, டிமயின் 1, பிளட்டிகினம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

- குழு 1: தொடக்கநூல் 25: 19 - 25 வாசித்து யாக்கோப்பின் பிறப்பைப் பற்றி சிறு விளக்கமொன்று தருக.
- குழு 2: தொடக்கநூல் 28: 19 - 26 வாசித்து பெத்தேலில் கண்ட காட்சியை போஸ்டர் ஒன்றின் மூலம் முன்வைக்கவும்.
- குழு 3: தொடக்கநூல் 32: 24 - 30 வாசித்து பெனியேலில் காட்சியை ஆக்கமாக முன்வைக்கவும்.
- குழு 4: தொடக்கநூல் 33: 1 - 3 வாசித்து நீங்கள் பெற்றுக் கொண்ட முன்மாதிரிகைகளை எழுதவும்.

### இணைப்பு 2

- முற் பயிற்சியோடு இணைப்பு 2ஐச் செயற்படுத்துங்கள்.
- யாக்கோபு ஏசாவின் ஆசீரைக் கபடமாகப் பெற்றுக் கொள்ளல்.
- ஏசா : தம்பி எனக்கு நன்றாகப் பசிக்கிறது. நீங்கள் செய்த சாப்பாட்டில் எனக்குக் கொஞ்சம் தாருங்கள்.
- யாக்கோபு : அப்படித்தர முடியாது. நான் மிகவும் கஷ்டப்பட்டுச் செய்தேன். இதற்காக எனக்கு என்ன தருவீர்கள்?

- ஏசா : எனக்கு அதைப் பற்றி நினைக்க நேரமில்லை. எனக்கு ஒரு பேயை (உண்ணுமளவுக்கு) சாப்பிடுமளவுக்குப் பசிக்கிறது. என்னிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்?
- யாக்கோபு : எனக்கு உங்களுடைய தலை மகனுக்குரிய ஆசியைத் தாருங்கள்.
- ஏசா : எனக்குப் பசிக்கிறது. தலை மகனுக்குரிய ஆசீயில் எனக்குப் பயனில்லை. அதனை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்.
- யாக்கோபு : அப்படியா! சரி, சரி. அப்போ நான் உங்களுக்கு வேண்டிய அளவு உணவு தருகிறேன். அப்படியானால் இனி நான் தான் மூத்தவன். நீங்கள் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். தந்தையினுடைய சொத்துக்களில் அதிகளவு எனக்கே உரியது.
- ஏசா : சரி!

**வீட்டுச் சூழல் :**

எல்லோருடனும் ஒற்றுமையாக வாழப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்கு பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.5** : அன்றாட வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளும் அழைத்தலுக்கு உரிய முறையில் பதிலளிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- திருத்தூதர்களின் அழைப்புத் தொடர்பான தகவல்களைத் திரட்டுங்கள்.
- தமது அழைத்தலுக்கு உரிய முறையில் பதிலளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- இறைவார்த்தையை வாசித்து சிந்திப்பர்.
- இறை வார்த்தைக்கு செவிமடுத்தலின் முக்கியத்துவத்தை விளக்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- முதல் நான்கு திருத்தூதரின் அழைத்தலைக் காட்டுகின்ற படத்தை வகுப்பில் காட்சிப்படுத்தி, கீழ்க் காணப்படும் கருத்துக்களின் அடிப்படையில் கலந்துரையாடலை நடத்துங்கள்.
- இயேசு கலிலேய கடற்கரையில் முதல் நான்கு திருத்தூதர்களை அழைத்தார்.
- இந் நால்வரும் பேதுரு, அந்திரேயா, பெரிய யாக்கோபு, யோவான் என்பவராவர்.
- இயேசு பன்னிரெண்டு திருத்தூதர்களைத் தெரிவு செய்தார்.
- மறை தூதுப் பணியை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பன்னிரெண்டு திருத்தூதர்கள் தெரிவு செய்ப்பட்டனர்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

- முதல் நான்கு திருத்தூதர்களை அழைத்தல். (மத்தேயு 4: 18 - 22)
- மத்தேயுவின் அழைப்பு (மத்தேயு 9: 9 - 13)
- திருத்தூதர் பன்னிருவரின் பெயர்கள். (மத்தேயு 10: 2 - 4)

  பேதுரு, அந்திரேயா, பெரிய யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தலமேயு, தோமா, மத்தேயு, யாக்கோபு, ததேயு, தீவிரவாதியான சீமோன், யூதாஸ் இஸ்காரியோத்து.
- யூதாசுக்காக மத்தியாஸ் நியமிக்கப்படுதல். (தி.ப 1: 12 - 26)
- மறைதூதுப் பணியை ஒப்படைத்தல். (மத்தேயு 28: 19 - 20)
- நாமும் திருமுழுக்கின் வழியாக இயேசுவின் சீடராக அழைக்கப் பட்டுள்ளோம்.
- அன்றாட வாழ்வில் பெற்றுக் கொள்ளும் அழைத்தல்களுக்கு உரிய முறையில் பதிலளிக்க வேண்டும்.
- மறைதூதுப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு நாமும் ஒத்துழைக்க வேண்டும்.

- பிறர்க்கு இறைவார்த்தையைச் சொல்லிக் கொடுத்தல்.
- இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதன் முக்கியத்துவத்தைப் பிறருக்குச் சொல்லிக் கொடுத்தல்.
- இறைவார்த்தையைத் தினமும் வாசித்தல்.
- சமூகத்துக்கான கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுதல்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு
- பிரிஸ்டல் போட், டிமயின், பிளட்டினம்
- இணைப்பு 1
- முதல் நான்கு திருத்தூதர்கள் அழைக்கப்பட்ட படம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்பக் கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- குழு 1: மத்தேயு 4: 18 - 22 ஐ வாசித்து முதல் நான்கு திருத்தூதர்களும் அழைக்கப்பட்ட விதத்தினை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
- குழு 2: மத்தேயு 9: 9 - 13 ஐ வாசித்து மத்தேயு அழைக்கப்பட்ட விதத்தினை நாடகமாக முன்வைக்கவும்.
- குழு 3: மத்தேயு 10: 2 - 4 ஐ வாசித்து பன்னிரு திருத்தூதர்களின பெயர்களை ஆக்கமாக முன்வைக்கவும்.
- குழு 4: திருத்தூதர் பணி 1: 12 - 26 ஐ வாசித்து யூதாசுக்காக மத்தியாஸ் தெரிவு செய்யப்பட்ட நிகழ்வை அறிக்கையாக முன்வைக்கவும்.
- குழு 5: மத்தேயு 28: 19 - 20 ஐ வாசித்து பிறரை இறைவன் பால் இட்டுச் செல்ல உங்களால் செய்யக் கூடிய செயல்கள் ஐந்தினை எழுதுக.

**வீட்டுச் சூழல் :**

இறை வார்த்தையைப் பிறர்க்குப் பகிர்ந்தளிக்கச் செயற்படுவோம்.

**தேர்ச்சி 3:0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 3:1** : திருமுழுக்கு வழங்கும் சடங்கு முறையில் அர்த்தத்துடன் பங்குபற்றுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- திருமுழுக்குத் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- திருமுழுக்கினூடாகப் புதுவாழ்வைப் பெறுகின்றோம் என்பதை ஏற்பர்.
- குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கும் சடங்கு ஒன்றினை நடித்துக் காட்டுவர்.
- திருமுழுக்கு வழங்கும் சடங்கில் அர்த்தத்துடன் பங்குபற்றுவர்.
- திருமுழுக்கு வழிபாடுகளில் அர்த்தமுள்ள முறையில் உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- குழந்தைகளுக்குத் திருமுழுக்கு வழங்கும் சடங்கு தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்திக் கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரும்படி கலந்துரையாடலில் ஈடுபடவும்.
- திருமுழுக்கு அருளடையாளத்தை வழங்கும் போது தண்ணீர், மெழுகுதிரி, வெள்ளைத்துணி, கிறிஸ்மாத் தைலம் என்பன பயன்படுத்தப்படுகின்றன.
- குருவானவர் குழந்தைகளின் தலையில் தண்ணீரை ஊற்றித் திருமுழுக்கு வழங்குகின்றார்.
- குழந்தைகளின் விசுவாச வாழ்வுக்குப் பொறுப்பாக ஞானப் பெற்றோர் நியமிக்கப்படுகின்றனர்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.
- பிதா, சுதன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு வழங்கப்படுகிறது.
- பின்வரும் ஒழுங்கு முறையில் திருமுழுக்குச் சடங்கு நிறைவேற்றப்படுகின்றது.
  - பிதா, சுதன், தூய ஆவியின் பெயரால் ஆரம்பிக்கப்படுதல்.
  - பெற்றோரிடமும், ஞானப் பெற்றோரிடமும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுதல்.
  - குருவானவர் குழந்தையின் நெற்றியில் சிலுவை அடையாளமிடுதல்.
  - இறைவார்த்தை வழிபாடு
  - ஆயத்த எண்ணை (OC தைலம்) பூசுதல்.
  - திருமுழுக்கு தண்ணீரை ஆசீர்வதித்தல்.
  - விசுவாசத்தை அறிக்கையிடுதல்.
  - தண்ணீரினால் திருமுழுக்குக் கொடுத்தல்.
  - கிறிஸ்மா தைலம் (SC தைலம்) பூசுதல்.
  - வெண்ணிற ஆடை அணிதல்.

- எரியும் மெழுகுவர்த்தி கொடுத்தல்.
- இறுதி ஆசீர் வழங்குதல்.

- திருமுழுக்குத் தொடர்பான திருச்சபைச் சட்டங்களை விளக்குதல்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- குழந்தைகளுக்கு திருமுழுக்கு அருளடையாளத்தை வழங்குவது தொடர்பான படங்கள்.
- திருமுழுக்கு அருளடையாளத்தை வழங்கும்போது பயன்படுத்தும் பொருட்கள் (தண்ணீர், வெள்ளைத் துணி, மெழுகுதிரி, பாஸ்கு மெழுகுதிரி, தீப்பெட்டி, ஆயத்த எண்ணெய், கிறிஸ்மாத் தைலம், இரு சிறிய குப்பிகள், குப்பிகளில் OC, SC என எழுதவும்)
- குழந்தைகளுக்கு திருமுழுக்கு அருளடையாளத்தை வழங்கும் சடங்கு நூல்.
- இணைப்பு 1
- டிமைன் தாள், மாக்கர் பேனா.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப கணிப்பீடுகளை வழங்கி மாணவர்களை மதிப்பீடு செய்து குறைகளை நிவர்த்தி செய்து மீள வலியுறுத்துங்கள்.

**இணைப்பு 1**

குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- குழு 1: திருவாழ்வுப் புத்தகத்தை மாணவர்களுக்கு வழங்கி திருமுழுக்கு வழங்கும் சடங்கை நிகழ்த்திக் காட்டச் செய்க
- குழு 2: பாடநூலில் 10வது பாடத்தைத் துணையாகக் கொண்டு திருமுழுக்கு வழங்கும் சடங்கின் ஒழுங்குமுறையினை எழுதிக்காட்டுக.
- குழு 3: திருமுழுக்குத் தொடர்பான திருச்சபையின் சட்டங்களை ஆக்கம் ஒன்றின் மூலம் முன்வைக்குக..

**இணைப்பு 2**

**குழு ஆய்வுப் பத்திரம்**

திருமுழுக்குத் தொடர்பான திருச்சபைச் சட்டங்கள்

**862** - ஓர் அவசரத் தேவைக்குத் தவிர, உரிய அனுமதியின்றி, மற்றொருவரின் எல்லைக்குள் தமது ஆளுமைக்கு உட்பட்டவர்களுக்குக் கூட திருமுழுக்கு அளிப்பதற்கு எவருக்கும் அனுமதியில்லை.

**857** - 1. ஓர் அவசரத் தேவைக்குத் தவிர, திருமுழுக்குக்குரிய இடம் ஓர் ஆலயம் அல்லது செபக்கூடமாகும்.

2. நியாயமான ஒரு காரணம் வேறுவிதமாகத் தூண்டினாலன்றி, வழக்கமாக, வயதுவந்த ஒருவர் அவரின் சொந்தப் பங்கு ஆலயத்திலும், ஒரு குழந்தை அதன் பெற்றோருக்குரிய பங்கு ஆலயத்திலும் திருமுழுக்குப் பெறவேண்டும்.

**865** - 1. வயதுவந்தவர் திருமுழுக்குப் பெறவேண்டுமென்றால், திருமுழுக்குப் பெறுவதற்கான விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். உண்மைகளிலும் கிறிஸ்தவக் கடமைகளிலும் போதுமான அளவு பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்; கிறிஸ்தவப் புகுமுகநிலை வழியாகக் கிறிஸ்தவ வாழ்வைச் சோதித்து அறிய வேண்டும்; மேலும் தம்முடைய பாவங்களுக்காக வருந்த அவரை அறிவுறுத்த வேண்டும்.

2. இறக்கும் ஆபத்துள்ள வயதுவந்தவர் விசுவாசத்தின் முக்கிய உண்மைகளைப் பற்றி ஓரளவு அறிவு பெற்று, திருமுழுக்குப் பெறுவதற்கான விருப்பத்தை ஏதாவது ஒரு விதத்தில் வெளிப்படுத்தி, கிறிஸ்தவ சமயக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கப் போவதாக வாக்குறுதி அளித்தால், அவருக்கு திருமுழுக்கு அளிக்கலாம்.

**867** - 1ம் வசனம் - குழந்தைகளுக்கு முதல் சில வாரங்களுக்குள் திருமுழுக்கு அளிக்கப்படுவதைக் கவனித்துக் கொள்ளப் பெற்றோர் கடைமைப் பட்டுள்ளனர்; பிறப்பிற்குப் பின், கூடிய விரைவில், ஏன் அதற்கு முன்பே கூட, குழந்தைகளுக்கு அருளடையாளத்தைக் கேட்கவும் அதற்காகத் தக்கமுறையில் தயாரிக்கவும் பெற்றோர் பங்குக்குருவை அணுகவேண்டும்.

**868** - 1ம் வசனம் - குழந்தைகளுக்கு சட்டமுறைப்படி திருமுழுக்கு அளிக்க பெற்றோர், குறைந்த அளவு அவர்களில் ஒருவர் அல்லது சட்டமுறைப் படி அவர்கள் இடத்தில் இருப்பவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**வீட்டுச் சூழல்**

உங்கள் பெற்றோர், ஞானப் பெற்றோருக்காக தினமும் செபியுங்கள்.

**தேர்ச்சி 3:0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 3:2** : மக்களைப் புனிதப்படுத்தும் அருட்பணியாளர்களுக்காக செபிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- குருக்கள் தொடர்பான பணிகளைப் பட்டியல்படுத்துவர்.
- குருக்களின் பணிகளைப் பாராட்டுவர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.
- குருக்களுக்காக செபிப்பர்.
- குருக்களின் பணிகளில் உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- குருத்துவம் வழங்கப்படும் படத்தை வகுப்பறையில் காட்சிப்படுத்தி அதன் அடிப்டையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
- படத்தில் இருப்பவர்கள் ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள்.
- ஆயரினால் குருவானவர் அபிசேகம் செய்யப்படுகின்றார்.
- ஆயர் அவர்கள் குருத்துவம் பெற வேண்டியிருப்பவர் தலையில் கைகளை விரித்து ஒரு குறிப்பிட்ட செபத்தைச் சொல்வதன்மூலம் குருப்பட்டம் வழங்கப்படுகிறது.
- குருத்துவம் என்பது இறைதந்தையால் தரப்படும் மகத்தான அழைப்பாகும்.
- குருக்கள் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் நடுநிலையாளராகச் செயற்படுகின்றனர்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

1. மறையுண்மைகளைப் போதித்து மறைாவட்டத்திலுள்ளவிசுவாசிகளின் விசுவாசத்தைப் பாதுகாப்பது.
2. அருளடையாளங்களை வழங்கி இறைமக்களைத் தூய்மைப்படுத்துவது.
3. மறைமாவட்டத் திருச்சபையை நிர்வகிப்பது என்பது ஆயரின் பணியாகும்.

- திருவழிபாட்டை நடாத்துதல், நற்செய்தியை போதித்தல், உண்மையான ஆயனாகச் செயற்படல் போன்றன குருக்களின் பணிகளாகும்.
- ஆயருக்கும், குருக்களுக்கும் உதவிசெய்தல், இறைவார்த்தையை எடுத்துரைத்தல், திருமுழுக்கு வழங்குதல் போன்றன திருத்தொண்டர்களின் பணியாகும்.
- குருக்களை மறைமாவட்டக் குருக்கள், துறவற சபைக் குருக்கள் என இருவகைப் படுத்தலாம்.

- மறைமாவட்டக் குருக்கள் ஆயர் ஒருவரின் கீழ் வாழ்ந்து தமது மறைமாவட்டத்தை கட்டியெழுப்பும் பணிகளில் ஈடுபடுவர்.
- துறவற சபைக் குருக்கள் சபை முதல்வரின் கீழ் வாழ்ந்து தமது சபையின் கறிஸ்மாவுக்கு ஏற்ப, பணியாற்றுவர்.
- மறைமாவட்டக் குருக்கள் கீழ்ப்படிதல், கற்பு ஆகிய இரு வாக்குறுதிகளைக் கொடுப்பர்.
- துறவற சபைக் குருக்கள் எளிமை, பணிவு, தூய்மை ஆகிய மூன்று வாக்குறுதிகளைக் கொடுப்பர்.
- நாம் அருட்பணியாளர்களுக்காக செபிக்க வேண்டும்.
- குருக்களின் பணிகளில் உதவுவது எமது கடமையாகும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 1, 2
- டிமைன் தாள், பிறிஸ்ரல் போட், மாக்கர் பேனா.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப கணிப்பீடுகளை வழங்கி மாணவர்களை மதிப்பீடு செய்து குறைகளை நிவர்த்தி செய்து மீள வலியுறுத்துங்கள்.

**இணைப்பு 1**

குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- 11ம் பாடத்தை வாசித்து கீழ்வரும் விடயங்களை ஆராய்ந்து ஆக்கம் ஒன்றின் மூலம் முன்வைக்குக.
- குழு 1: ஆயர், குருக்கள், திருத்தொண்டர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை வெவ்வேறாக அட்டவனைப்படுத்துக.
- குழு 2: மறைமாவட்டக் குருக்களுக்கும், துறவற சபைக்குருக்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக.

**வீட்டுச் சூழல்**

தினமும் குடும்பச் செபமாலை சொல்லும்போது குருக்களுக்காகச் செபிக்கவும்.

**தேர்ச்சி 3:0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 3:3** : துறவற வாழ்வின் மேன்மையை மதிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- துறவற வாழ்வு பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- துறவற அர்ப்பண வாழ்வு ஓர் இறை அழைப்பு என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.
- துறவற வாழ்வை மதிப்பர்.
- துறவிகளின் பணிகளுக்கு உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- திருச்சபையில் காணப்படும் துறவற சபைகள் பற்றிக் கேட்டறிந்து அவை பற்றிக் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

  - சமூகத்தில் கார்மேல் கன்னியர் சபை, திருக்குடும்ப கன்னியர் சபை, நல்லாயன் கன்னியர் சபை, டிலாசால் சகோதரர் சபை போன்ற சபைகள் பல உள்ளன.
  - இவர்கள் அனைவரும் இறையரசுப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.
  - சில துறவற சபையினர் பங்கு, சமூக, கல்விப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.
  - சில துறவற சபையினர் பிறர் அன்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - துறவற சபையினரை (i) துறவற குருக்கள் (ii) துறவிகள் என இருவகைப்படுத்தலாம்.
  - அமலமரித்தியாகிகள் சபை, இயேசு சபை, ஆசீர்வாதப்பர் சபை, பிரான்சிஸ்கன் சபை, செபமாலை தாசர் சபை, டொமினிக்கன் சபை என்பன துறவற குருக்கள் சபையைச் சேர்ந்தவை.
  - துறவிகளை அருட்சகோதரர்களின் துறவிகள் சபை, அருட்சகோதரிகளின் துறவிகள் சபை என இருபிரிவாக நோக்கலாம்.
  - டிலாசால் சகோதரர் சபை, மாறிஸ்ட் சகோதரர் சபை ஆகியோரை அருட்சகோதரர் சபைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.
  - அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் சபை,திருக்குடும்ப கன்னியர் சபை, நல்லாயன் கன்னியர் சபை, திருச்சிலுவைக் கன்னியர் சபை, டொமினிக்கன் சபை, ஆசீர்வாதப்பர் சபை, இரட்சகர் சபை என்பனவற்றை அருட்சகோதரிகள் சபைக்கு உதாரணமாகக் கூறலாம்.

- இவர்கள் அனைவரும் எளிமை, தூய்மை, கீழ்ப்படிவு ஆகிய மூன்று வார்த்தைப் பாடுகளைக் கொடுப்பர்.
- இவர்கள் விண்ணகப் பரிசைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். (1கொரி 9: 24 - 27)
- குருத்துவ, துறவற வாழ்வுக்கான தமது அழைப்புப் பற்றி சிந்திப்பர்.
- பங்குத் தலங்களிலும், பாடசாலைகளிலும் பணிபுரியும் துறவிகளுக்கு உதவி செய்வர்.
- துறவற வாழ்வின் மேன்மையை மதித்துப் பாராட்டுவர்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 1
- டிமைன் தாள், பிறிஸ்ரல் போட், மாக்கர் பேனா.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப கணிப்பீடுகளை வழங்கி மாணவர்களை மதிப்பீடு செய்து குறைகளை நிவர்த்தி செய்து மீளவலியுறுத்துங்கள்.

**இணைப்பு 1**

**குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்**

- பாடநூலின் பன்னிரெண்டாம் பாடத்தை நன்கு வாசித்து துறவற வாழ்வு தொடர்பான ஆக்கமொன்றை முன்வைக்க ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

துறவிகளுக்கு மதிப்பளிக்க பிள்ளைகளை பயிற்றுவியுங்கள்.

**தேர்ச்சி 3:0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 3:4** : பொதுநிலையினருக்குரிய மறைத்தூதுப் பணிச் சபையில் செயற்பாடுள்ள அங்கத்தவராக இருப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- பொதுக்குருத்துவம் பற்றிய தகவல்களை திரட்டுவர்.
- மூவித பணியில் தரப்படும் பொறுப்புக்களை நிறைவேற்ற விருப்பம் தெரிவிப்பர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.
- பங்குப் பணிகளில் ஆர்வத்துடன் பங்கெடுக்க முயற்சிப்பர்.
- பங்கிலுள்ள பக்திச் சபைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- பங்கிலுள்ள பக்திச்சபைகளைப் பற்றிக் கேட்டறிந்து பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடவும்.
  - பங்கிலுள்ள பக்திச்சபைகளின் பெயர்கள்
    - பீடப்பணியாளர் சபை
    - பாடகர் குழாம்
    - திருப்பாலத்துவ சபை
    - இளைஞர், யுவதிகள் மன்றம்
    - மரியாயின் சேனை
    - வின்சன்டிபோல் சபை
    - பிரான்சிஸ்கன் மூன்றாம் சபை
    - அன்பியக் குழு
  - சிறுவர்கள் அங்கம் பெறும் சபைகள்
    திருப்பாலத்துவ சபை / சிறுவா் மரியாயின் சேனை
  - இளைஞர்கள் அங்கம் பெறும் சபைகள்
    பாடகர் குழாம், இளைஞர் கழகம்
  - பெரியோர் அங்கம் பெறும் சபைகள்
    மரியாயின் சேனை, வின்சன்டிபோல் சபை

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - ஆயர், குரு, திருத்தொண்டர்கள் தவிர்ந்த திருமுழுக்குப் பெற்ற விசுவாசிகள் அனைவரும் பொதுநிலையினர் ஆவர்.

- கிறிஸ்தவன் ஒருவர் திருமுழுக்கு அருளடையாளத்தைப் பெறுவதன் மூலம் பொதுக் குருத்துவப் பணிபுரிய அழைக்கப்படுகின்றார்.
- குருத்துவ அபிஷேகத்தின் மூலம் ஒரு கிறிஸ்தவன் பணிக்குருத்துவ வாழ்வுக்கு அழைக்கப்படுகின்றார்.
- பொதுக்குருத்துவம் வழியாக பொதுநிலையினர் கிறிஸ்துவிடமிருந்து போதிக்கும் பணி, புனிதப்படுத்தும் பணி, வழிநடத்தும் பணி ஆகிய மூவிதப் பணிகளைப் பெற்றுள்ளனர்.
- நற்செய்தியை பகிர்ந்துகொள்ளல். இறையியல் கற்றல், சமூகத் தொடர்பு சாதனங்கள் வழியாக இறைவார்த்தையைப் பரப்புதல், தியானக் கூட்டங்களை நடாத்துதல், விவிலிய, இறையியல், திருவழிபாடு போன்ற வகுப்புக்களை நடாத்தல் என்பன போதிக்கும் பணிகளுக்கு உதாரணமாகும்.
- அருட்சாதனங்களை வழங்குதல், வாசகர் பணி, நற்கருணை ஆராதனை நடாத்துதல், திருப்புகழ்மாலை சொல்லுதல், அருளடையாளங்களைப் பெறத் தயார்ப்படுத்தல் என்பன புனிதப்படுத்தும் பணிக்கு உதாரணமாகும்.
- திருச்சபையின் சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றின் செயற்பாடுகளில் பங்கேற்பது வழிநடாத்தும் பணிக்கு உதாரணமாகும்.
- சிறுவர்களாகிய நாம் பங்கிலும், பாடசாலையிலும், நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழ்வதன் மூலமும், இறைவார்த்தையை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலமும் போதிக்கும் பணியில் பங்கெடுக்கலாம்.
- பீடப்பணியாளர்கள் சபையில் இணைந்து செயற்படுவதன் மூலமும், பாடகர் குழாம், வாசகர் பணி என்பவற்றில் ஈடுபடுவதன்மூலமும் புனிதப்படுத்தும் பணியில் ஈடுபடமுடியும்.
- பாடசாலையில் தலைமைப் பொறுப்பை ஏற்று செயற்படுவதன் மூலம் வழிநடத்தும் பணியில் பங்கெடுக்கலாம்.
- பொதுக்குருத்துவப் பணிகளை நாம் ஆற்ற திருப்பாலத்துவ சபை, பீடப்பணியாளர் சபை, பாடகர் குழாம், அன்பியக் குழுக்கள், சிறுவர் இயக்கம் என்பன எமக்கு உதவுகிறது.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- டிமைன் தாள், பிறிஸ்ரல் போட், மாக்கர் பேனா.
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப, கணிப்பீடுகளை வழங்கி மாணவர்களை மதிப்பீடு செய்து குறைகளை நிவர்த்தி செய்து மீளவலியுறுத்துங்கள்.

**இணைப்பு 1**

குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- குழு 1: பாடநூலில் 13வது பாடத்தை வாசித்து பொதுக்குருத்துவத்தின் மூலம் பொதுநிலையினர் பெறும் மூவித பணிகளையும், அவற்றின் மூலம் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளையும் அட்டவணைப்படுத்திக் காட்டுக.
- குழு 2: தரம் 7 இல் கல்வி பயிலும் நீங்கள் பாடசாலையிலும், பங்கிலும் செய்யக்கூடிய பொதுக்குருத்துவப் பணிகளை ஆக்கம் ஒன்றின் மூலம் முன்வைக்கவும்.

**வீட்டுச் சூழல்**

பொதுநிலையினருக்குரிய மறைதூதுப் பணிச் சபைகளில் பிள்ளைகள் இணைந்து செயற்பட பெற்றோர் தம்பிள்ளைகளை ஊக்குவிக்கவும்.

**தேர்ச்சி 3:0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 3:5** : திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையைப் பின்பற்றி வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- திருமண அருளடையாளம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றி வாழவேண்டும் என்பதை ஏற்பர்.
- திருமண அருளடையாளம் தொடர்பாகத் திரட்டிய தகவல்களைக் கொண்டு ஆக்கம் ஒன்றினை முன்வைப்பர்.
- முன்மாதிரிகையான குடும்பமாகத் திகழ்வர்.
- பெற்றோர் தம் கடமைகளைச் செய்ய ஒத்துழைப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- திருப்பலியில் திருமண அருளடையாளம் நிறைவேற்றப்படும் படத்தினை வகுப்பறையில் காட்சிப்படுத்தி பின்வரும் கருத்துக்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடவும்.
  - திருமண அருளடையாளம் ஆலயத்தில் இறைவன் முன்னிலையில் நடைபெறுகிறது.
  - திருமணச் சடங்கு திருப்பலியினூடாக நிறைவேற்றப்படுகின்றது.
  - இறைவன் மணமக்களை ஆசீர்வதிக்கிறார்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

**கிறிஸ்தவ திருமணத்தின் பண்புகள்.**

- ஒருமை, கட்டவிழாமை என்பன கிறிஸ்தவ திருமணத்தின் பண்புகள்.
- ஒருமை என்பது ஒருவனுக்கு ஒருத்தி அல்லது ஒருத்திக்கு ஒருவன் என்பதைக் குறிக்கின்றது.
- திருமணம் செய்து கொண்ட ஆணும் பெண்ணும் வாழ்நாள் முழுவதும் (மரணம் வரையிலும்) இணைந்து வாழ்வது கட்டவிழாமையாகும்.
- திருமணம் இறைவனால் உருவாக்கப்பட்டமையால் அது புனிதமானதாகும்.
- திருமணம் ஒரு உடன்படிக்கையாகும்.

**பெற்றோரின் கடமைகள்**

- பிள்ளைகளுக்குத் தேவையான அன்பையும் பாதுகாப்பையும் வழங்குதல்.
- தம் பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் திருமுழுக்குக் கொடுத்தல்.

- இறைவன் தமக்கு அருளும் பிள்ளைகளை கத்தோலிக்க விசுவாசத்திலும், உலக அறிவிலும் வளர்த்தல்.
- கத்தோலிக்க கல்வியைப் பெறக்கூடிய பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்த்தல்.
- தம்மட்டிலும், சமூகத்தின் மட்டிலும் பொறுப்புணர்வுள்ள விதத்தில் பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.
- பிள்ளைகளின் உடல், உள, ஆன்மீக தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களை முழு மனிதனாக உருவாக்குதல்.
- திருக்குடும்பத்தைப் பின்பற்றி வாழ்வதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் நல்லதொரு வாழ்வை அமைத்துக் கொள்ள முடியும்.
- அன்பு, இரக்கம், பொறுமை, விட்டுக்கொடுப்பு, பிறருக்கு உதவிசெய்தல், தூய்மை, கீழ்ப்படிவு போன்ற பண்புகளை திருக்குடும்பத்தில் இருந்து கற்றுக் கொள்ள முடியும்.
- யோசேப்பு, மரியாள், இயேசு ஆகியோர் இறைத் திட்டத்தை ஏற்று வாழ்ந்ததைப் போல் நாமும் வாழவேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 1
- டிமைன் தாள், மாக்கர் பேனா
- திருவிவிலியம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப கணிப்பீடுகளை வழங்கி, மாணவர்களை மதீப்பீடு செய்து, குறைகளை நிவர்த்தி செய்து மீளவலியுறுத்துங்கள்.

**இணைப்பு 1**

குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- குழு 1: பாடநூலில் 14 ஆம் பாடத்தை வாசித்து, திருமணம் பற்றிய தகவல்களைத் திரட்டி, அவற்றை ஆக்கம் ஒன்றின் மூலம் முன்வைக்குக.

- குழு 2: திருக்குடும்பத்தின் பண்புகளையும், எமது குடும்பத்தின் பண்புகளையும் அட்டவணை ஒன்றின் மூலம் முன்வைக்குக.

**வீட்டுச் சூழல்**

திருக்குடும்பத்தின் பண்புகளைப் பிள்ளைகளிடத்தில் வளர்ப்போம்.

**தேர்ச்சி 4:0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : தங்கள் கடமைகள் பொறுப்புக்களை நிறைவாகச் செய்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- நான்காம் கட்டளை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- பாடசாலைக்காகத் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டுமென ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வர்.
- பெரியோரை மதிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:** “

**படிமுறை 1**

- “இன்னமுதூட்டி“ என்ற பாடல் எழுதப்பட்ட போஸ்டரைக் காட்சிப்படுத்தி இராகத்தோடு பாடுங்கள்.
- கீழ்க்காணப்படும் கருத்துக்கள் வெளிவரக் கூடியதாகக் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக தம்மை அர்ப்பணிக்கின்ற விதத்தினை உதாரணங்களோடு விபரித்தல்.
- பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டியவை.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிப் பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - பத்துக் கட்டளைகளின் இரண்டாவது பகுதியின் முதற்கட்டளை பெற்றோருக்கு மதிப்பளித்தல்.
  - இறைவனுக்கு அடுத்ததாக நாம் அதிகமாக அன்பு செலுத்த வேண்டியவர்கள் பெற்றோராவர். ஏனெனில் இறைவனிடமிருந்து கிடைக்கின்ற வாழ்வையும் நம்பிக்கையையும் பெற்றோரிடமிருந்தே பெறுகின்றோம்.
  - பெற்றோருக்கு அன்பு செலுத்தி, கீழ்ப்படிவது எமது கடமையாகும்.
  - இக்கட்டளை வழியாக நாம் கீழ்ப்படிந்து மரியாதை செய்ய வேண்டியவர்கள் (சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், ஆசிரியர்கள், முதியோர்) ஆவர்.
  - பெற்றோர் மட்டில் உள்ள கடமைகள்.
    - வீட்டு வேலைகளில் உதவி செய்தல்.
    - அவர்களின் துன்பங்களிலும் நோய்களின்போதும் உதவி செய்தல்.
    - அவர்களின் வயோதிபத்தில் தனிமையிலிருக்க விடாமல் பாதுகாக்க வேண்டும்.

- பங்கின் மட்டில் உள்ள கடமைகள்.
    - பங்குக் குருவுக்கு மதிப்பளித்தல், கீழ்ப்படிதல்.
    - பங்கிலுள்ள பொதுநிலை அப்போஸ்தலிக்க சபைகளில் சேர்ந்து பணியாற்றுதல்.

- பாடசாலை மட்டில் உள்ள கடமைகள்
    - பாடசாலையில் அதிபர், ஆசிரியர், மாணவர் தலைவர் ஆகியோரை மதித்தலும் கீழ்ப்படிதலும்.
    - பாடசாலையில் தமக்கு ஒப்படைக்கப்படுகின்ற காரியங்களை தம்மாலியன்றவரை நிறைவேற்றல்.

- நாட்டின் மட்டில் உள்ள கடமைகள்
    - அரசியல் தலைவர்களைப் பாராட்ட வேண்டிய இடங்களில் பாராட்டி அவர்களின் பணிகள் வெற்றிபெறச் செபித்தல்.
    - தாம் பெறுகின்ற சம்பளத்துக்கு மட்டும் அடிமையாகாமல் பிரமாணிக்கமாகப் பணியாற்றுதல்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பிரிஸ்டல் போட், டிமையின், பிளட்டினம்
- இணைப்பு 1
- பாடல் அடங்கிய போஸ்டர்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

பாட நூலின் 15 வது பாடத்தை வாசித்து 4வது கட்டளை தொடர்பான ஆக்கங்களை முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**இணைப்பு 2**

**பாடல்**

இன்னமுதூட்டி எனை வளர்த்த அம்மா
எந்த வேளையிலிலும் அவள் என்னோடு கண் விளிப்பாள்.
என்ன துன்பத்திலும் என்னோடு பங்கெடுப்பாள்
என் தேவனே எந்தன் அன்பு அம்மாவைக் காத்தருள்வாய்!

வியர்வை சிந்தி என்னை வளர்த்திட உழைப்பார்.
எனது வாழ்வு சிறந்திட உயர் தியாகம் செய்திடுவார்
எனது எதிர்காலம் ஒளிமயமாக்கும்
என் தேவனே எந்தன் அன்பு அப்பாவைக் காத்தருள்வாய்!

**வீட்டுச் சூழல் :**

தினமும் வீட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் பெற்றோரின் ஆசீரைப் பெறச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறைக் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் அன்பாக வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம் 4:2** : உண்மை உள்ளவராக இருப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- உண்மையுள்ள ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு உதவக்கூடிய விதம் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- உண்மை உள்ளவராக வாழும்போது மனச்சான்றின் குரலுக்குச் செவிமடுக்க இடம் கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- பொய்மை விலக்கி உண்மை பேசுவார்கள்.
- சமூகத்திலே ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் இருப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- தி.ப 5:1-11 இன் வழியாக பொருத்தமான உரையாடல் ஒன்றைத் தயாரித்து, முற்பயிற்சியோடு வகுப்பில் நடித்துக்காட்டுவதற்கு ஆயத்தமாகி கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிவரும்படியாக, கலந்துரையாடலை நடத்துங்கள்.
  - அனனியா சபிரா பற்றிய நிகழ்வு
  - இந்நிகழ்வின் வழியாக மீறப்பட்ட கட்டளை

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.
  - பொய் பேசுதல் மனிதனை அசுத்தப்படுத்துவதற்கான காரணமாய் அமைகிறது. (மத்தேயு 15:10-12, 15-20)
  - பொய்பேசுவதை விலக்கி உண்மை பேச வேண்டும். (எபேசி 4: 25)
  - எட்டாம் கட்டளை உண்மை உள்ளவர்களாக இருத்தல், உண்மைக்குச் சான்று பகர்தல் என்பனவற்றின் முக்கியத்துவத்தைக் கூறுகிறது.
  - சாத்தான் பொய்மையின் தந்தை (யோவா 8: 44)
  - வார்த்தையிலும், செயலிலும் உண்மைக்குச் சான்று பகர்தலே எம்மில் எதிர்பார்க்கப்படுகிறது. (க.தி.ம 2464)
  - உண்மையை திரிவுபடுத்திக் கூறுவது பாவம்.
  - உமது அயலவர்களுக்கு எதிராகப் பொய்ச்சான்று கூறாது இருத்தல் வேண்டும். (வி.ப 20:16)
  - சத்தியத்தை மீற வேண்டாம். இறைவனுக்கு நாம் செய்த சத்தியத்தை நிறைவேற்ற வேண்டும். (இ.ச 5: 20)
  - பொய் சிறு விடயமெனினும் அது பாரதூரமான குற்றமாகும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (மத்தேயு 15: 10 - 12, 15 - 20; யோவான் 8: 44; தி.ப 5:1-11; எபே 4: 25; விப 20: 16; இச 5:20)
- கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இல 2464
- பிறிஸ்ரல் போட், டிமைன் தாள், பிளட்டினம்.
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்பக் கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாட நூலின் 16வது பாடத்தை வாசித்து பத்துக்கட்டளைகளில் 8வது கட்டளை தொடர்பாகக் கீழ்க் காணப்படும் கருத்துக்களுக்கேற்ப ஆக்கங்களாக முன்வைப்பதற்காக ஆயத்தமாகுங்கள்.
    - பொய் பேசுவது மனிதனை அசுத்தப்படுத்துகிறது.
    - பொய் பேசுவதை விலக்கி உண்மை பேச வேண்டும்.
    - உண்மைக்குச் சான்று பகர்தல்.
    - அயலவருக்கு எதிராக பொய்ச்சான்று கூறாதிருத்தல்.
    - சத்தியத்தை மீறாதிருத்தல்.
    - சாத்தான் பொய்யின் தந்தை.

**வீட்டுச் சூழல்**

குடும்பத்திலே எப்போதும் உண்மை பேசுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறைக் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் அன்பாக வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம் 4:3** : பிறர் சொத்துக்களைப் பாதுகாப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- 7வது கட்டளையின்படி எவ்வாறு வாழவேண்டும் என்பது தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- நேர்மையான முறையில் சொத்துக்களைத் தேட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- களவு செய்யாதிருப்பர்.
- பிறர் உடைமைகளைப் பாதுகாப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- களவு செய்தல் தொடர்பான பத்திரிகைத் தலைப்புகளை உள்ளடக்கிய போஸ்டர் ஒன்றினை வகுப்பில் காட்சிப்படுத்திக் கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக் கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.

    - பத்திரிகைத் தலைப்புகளின் வழியாக எழுந்தவை.
    - 7வது கட்டளை மீறப்படல்.
    - 7வது கட்டளையை எழுதுதல்.
    - 7வது கட்டளையின் படி செய்யத் தகாதன.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

    - 7வது கட்டளையால் களவு செய்தல் தடை செய்யப்படுகிறது. பலவந்தமாக எடுத்தல், நீதியற்ற முறையில் எடுத்துக் கொள்ளல், பிறர் உடைமைகளை அழித்தல் என்பன.
    - கிறிஸ்தவர்களாகிய நாம் சிறுபராயத்திலிருந்து பிறருடைய உடைமைகளைப் பாதுகாப்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.
    - நீதியான முறையில் செல்வத்தை உழைத்தல் வேண்டும். (நேர்மையான வழிகள்: வேலை செய்தல், விலை கொடுத்து வாங்குதல், பரிமாறிக் கொள்ளல், பரிசு, உரிமை வழியாகப் பெறல்))
    - கபடம், நேர்மையற்ற செயல், இலஞ்சம் வாங்குதல் என்பன வழியாகக் களவு இடம்பெறுகிறது.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பத்திரிகைத் தலைப்பகளைக் கொண்ட போஸ்டர்.
- பிறிஸ்ரல் போட், டிமைன் தாள், பிளட்டினம்.
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாட நூலின் 17வது பாடத்தை வாசித்து 7வது கட்டளைக்கு ஏற்ப கீழ்க் காணப்படும் காரணங்களுடன் தொடர்புடைய ஆக்கங்களை முன்வைக்க ஆயத்தமாகுங்கள்.
    - 7வது கட்டளையால் தடை செய்யப்பட்டவை.
    - செல்வத்தை உழைக்கும் நீதியான முறை (நேர்மையான வழிகள்)
    - களவு இடம் பெறும் வழிகள்.

**வீட்டுச் சூழல்**

களவு செய்யாமல் இருப்பதன் வழயாக நல்ல முன்மாதிரிகையை எடுத்துக் காட்டுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறைக் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் அன்பாக வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம் 4:4** : கிடைப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- 10வது கட்டளைக்கேற்ப வாழ வேண்டிய வித்தினைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- பேராசையான சிந்தனைகள் செயலாக மாற்றமடையுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- கிடைப்பதைக் கொண்டு திருப்திப்படுவர்.
- பிறருடைய உடைமைகளைப் பாதுகாப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 1இல் உள்ள பாடலை டிமையின் தாளில் எழுதி மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி ஒலிப்பதிவுக் கருவியை செயற்பட வைத்து, அப்பாடலின் முதலாவது சொல்லை மாணவர்கள் செவிமடுக்கும்படி செய்து அது தொடர்பாகக் கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக் கொணரக் கூடியதாகக் கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - இப்பாடலின் வழியாக வெளிப்படும் செய்தி
  - 10வது கட்டளையை மீறுதல்.
  - 10வது கட்டளையின் பெயர்.
  - 10வது கட்டளையின் படி செய்யத் தகாத செயல்கள்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - 7வது கட்டளையின் வெளிவாரியான செயற்பாடுகளை மட்டும் குறிப்பிடல்.
  - 10வது கட்டளையின்படி பேராசை கொள்வதும் பாவமாகும்.
  - பேராசையானது சிந்தனைகள் செயல்களாக மாற்றமடைகின்றன. (மீக்கா 2: 1 - 2)
  - பேராசை தலையான பாவமாகும் (க.தி.ம 2534 - 2540)
  - பேராசை, உலோபித்தனம் என்பவற்றுக்கு உள்ளாகாதபடி நாம் கவனமாக இருத்தல் முக்கியமாகும்.
  - இறைவனே உடைமைகள் அனைத்துக்கும் உரிமையாளர் என்பதை கவனத்தில் கொள்ளல்.
  - இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்டவைக்காக நன்றி கூற வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பாடல், ஒலிநாடா, ஒலிப்பதிவுக்கருவி
- இணைப்பு 1
- திருவிவிலியம் (மீக்கா 2: 1 - 2)
- க.தி.ம (2534 - 2540)
- பிரிஸ்டல் போட், டிமையின், பிளட்டினம்
- இணைப்பு 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாட நூலின் 17வது பாடத்தை வாசித்து பத்துக்கட்டளைகளில் 10வது கட்டளைக்கேற்ப வாழவேண்டிய விதத்தினை எடுத்துக்காட்டும் வகையில் ஆக்கமொன்றினை முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**இணைப்பு 2**

**பாடல்**

**திருடாதே பாப்பா திருடாதே**

திட்டம்போட்டு திருடும் கூட்டம்
திருடிக்கொண்டே இருக்கும்
அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்கும்.
திருடராய் பார்த்து திருந்தாவிட்டில்
திருட்டை ஒழிக்க முடியாது.

**வீட்டுச் சூழல்**

கிடைப்பதைக் கொண்டு திருப்தியடையப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கவும்.

**தேர்ச்சி 5:0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:1** : முறையாகவும் பக்தியாகவும் செபமாலையைச் சொல்லுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- செபமாலை பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- செபமாலைப் பக்தி எம் வாழ்வைப் பாதுகாக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- தினமும் குடும்பத்தில் செபமாலை செபிப்பர்.
- செபமாலை பக்தியோடு தொடர்பான பங்கிலுள்ள செயற்பாடுகளில் ஊக்கத்துடன் பங்குபற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- வகுப்பறையில் சிறிய ஒரு மேசையில் பூமாலை சூடப்பட்ட மரியன்னையின் ஒரு திருச்சொரூபத்தை வைத்து எரிகின்ற ஒரு விளக்கையும் வைத்து, மறை உண்மைகளோடு ஒரு பந்தி செபமாலையைச் சொல்லுங்கள். பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரும்படியாக கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - செபமாலை சொல்லுகின்ற முறையும் அதற்குரிய செபங்களும்.
  - செபமாலை சொல்லுகின்ற சந்தர்ப்பங்கள்.
  - குடும்பமாக ஒன்று சேர்ந்து செபமாலை சொல்வதன் முக்கியத்துவம்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - செபமாலையின் வரலாறு.
  - செபமாலை சொல்லும் போது சொல்லப்படும் மறை உண்மைகள் அதற்குரிய நாட்கள்.
  - செபமாலை சொல்லும் முறையும் அதற்குரிய செபங்களும்.
  - ஓ என் இயேசுவே
  - கிருபை தயாபரத்துச் செபம்.
  - காணிக்கைச் செபம்.
  - மரித்தோருக்கான செபமாலையும், மன்றாட்டு மாலையும்
    (இச் செபங்களை மாணவரிடம் மனப்பாடமாகக் கேட்கவும்)
  - பல்வேறு மன்றாட்டு மாலைகள்
    - இயேசுவின் திருஇருதய மன்றாட்டு மாலை

- மரியாவின் மன்றாட்டு மாலை
- புனித அந்தோனியாரின் மன்றாட்டு மாலை
- புனித யூதா ததேயுவின் மன்றாட்டு மாலை
- புனித செபஸ்தியாரின் மன்றாட்டு மாலை

- செபமாலையை சரியாகவும் முறையாகவும் செபித்தல்.
- குடும்பமாக ஒருமித்துத் தினமும் செபமாலை செபித்தல்.
- சந்தர்ப்பங்களுக்கேற்ப செபமாலையையும் மன்றாட்டு மாலைகளையும் செபித்தல்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- பாடநூல் 19வது பாடம்
- செபமாலை சொல்லும் முறையும், அதற்குரிய செபங்களும், மறை உண்மைகளும் அடங்கிய ஒரு புத்தகம்.
- பூமாலை சூடப்பட்ட மரியன்னையின் திருச்சொரூபம்.
- ஒரு விளக்கு
- டிமைன் தாள், வெற்றுத் தாள், பிளட்டினம்
- ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு செபமாலை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- குழு 1: பாடநூலில் 19 வது பாடத்தை வாசித்து, செபமாலையின் வரலாறு பற்றி போஸ்டர் ஒன்றை ஆக்குங்கள்.

- குழு 2: செபமாலை சொல்லும் முறை, மறை உண்மைகள் உள்ள புத்தகத்தைக் கொடுத்துச் செபமாலை சொல்லும்போது நாம் உபயோகிக்கும் மகிழ்ச்சி தரும் மறை உண்மை, துயர மறை உண்மை போன்றனவற்றை உள்ளடக்கிய ஆக்கமொன்றினை ஒரு போஸ்டர் வழியாக முன்வைக்கவும்.

- குழு 3: செபமாலை சொல்லும் முறை மறை உண்மைகள் உள்ள புத்தகத்தைக் கொடுத்துச் செபமாலை சொல்லும் போது நாம் உபயோகிக்கும் ஒளியின் மறை உண்மை, மகிமை நிறை மறை உண்மை போன்றவற்றை உள்ளடக்கிய ஆக்கமொன்றினை போஸ்டர் ஒன்றின் வழியாக முன் வைக்கவும்.

- குழு 4: மரித்தோரின் செபமாலையும் அதனைச் சொல்லும் சந்தர்ப்பங்களையும் கலந்துரையாடி இந்த செபமாலையைச் சொல்லும் முறையையும் வகுப்பில் முன்வைக்கவும்.

- குழு 5: பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லுகின்ற மன்றாட்டு மாலைகளைக் கலந்துரையாடி அவற்றின் செபங்களைப் பட்டியல் படுத்தி முன்வைக்கவும்.

**வீட்டுச் சூழல்**

செபமாலையை எப்போதும் தம்மோடு வைத்திருக்கும்படி பழக்குங்கள்

**தேர்ச்சி 5:0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:2** : பயனுள்ள முறையில் ஆலயத் திருவிழாக்களைக் கொண்டாடுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- ஆலயத்தின் வருடாந்த திருவிழா தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- ஆலயத்தின் திருவிழாக் காலம் உண்மையான ஆன்மீகப் புத்தெழுச்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய காலப்பகுதி என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- திருவிழாக் காலத்தில் தமது வாழ்வில் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வர்.
- திருவிழாக் காலத்தில் பங்கின் பொதுச் செயற்பாடுகளில் ஒத்துழைப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- கத்தோலிக்க சஞ்சிகையொன்றில் பிரசுரமான ஆலய வருடாந்த திருவிழா தொடர்பாக வெளியாகியுள்ளதை வகுப்பில் காட்சிப்படுத்தி, அதனை வாசிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கி கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக் கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - வருடத்துக்கொரு முறை ஆலயத் திருவிழா நடைபெறுகிறது.
  - கொடியேற்றப்படும் அடையாளத்தோடு திருவிழா ஆரம்பமாகிறது.
  - ஆலய திருவிழாவின் போது 8 நாட்கள் ஆராதனையும், 9ம் நாள் மாலை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து திருவிழாத் திருப்பலியும் நடாத்தப்படும்.
  - ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் திருச் சொரூபத்தைப் பக்தியோடு பவனியாக எடுத்துச் செல்வர்.
  - அனைத்துப் பங்கு மக்களும் ஒற்றுமையாக இந்தச் சந்தர்ப்பத்தில் செயற்படுவர்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - பத்து நாள் வழிபாட்டுக்குரிய பின்னணி
  - ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதர் தொடர்பாக அறிந்து கொள்ளல்.
  - ஆலயத்திருவிழா நடாத்தப்படுவதன் நோக்கம்.
  - கொடி ஏற்றவதற்கான அர்த்தம்.
  - திருவிழாக் காலங்களில் ஆன்மீக செயல்களுக்கு முதலிடம் கொடுத்தல்.
  - திருவிழாக் காலத்தில் நடைபெறும் நவநாட்களில் இறைவார்த்தையைத் தியானிப்பதற்கு முதலிடம் கொடுப்பர்.

- நம்பிக்கையுடனும் பக்தியுடனும் திருச் சொரூப பவனியில் பங்குபற்றுதல்.
- திருவிழாக் காலத்தில் வழங்கும் தான தரும செயல்களை அர்த்தத்துடன் செய்தல்.
- உண்மையான மனமாற்றத்துக்குரிய காலமாக இதனைப் பயன்படுத்த வேண்டும்.
- புனிதரின் பரிந்துரையினால் எமக்கு வரங்கள் கிடைத்தல்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ஆலயத் திருவிழா தொடர்பான பத்திரிகை செய்தியுள்ள (கத்தோலிக்க சஞ்சிகை) போஸ்டர்.
- இணைப்பு 1
- டிமைன் தாள், ஹாவ்சீட், பிளட்டினம்
- பாடல் புத்தகம்
- பாடசாலையின் அருகாமையிலுள்ள ஆலயம் அர்ப்பணிக்கப்பட்ட புனிதரின் வாழ்க்கை வரலாறுள்ள ஒரு புத்தகம்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- குழு 1: 20ஆம் பாடத்தை வாசித்து, ஆலய திருவிழா கொண்டாடுவதன் முக்கியத்துவம் தொடர்பான ஆக்கத்தினை முன்வைக்கவும்.
- குழு 2: உங்கள் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் வாழ்க்கை வரலாற்றை ஆக்கமாக முன்வைக்கவும்.
- குழு 3: திருவிழாவின் மாலை ஆராதனை, திருவிழாத் திருப்பலியில் பாடுவதற்குப் பொருத்தமான பாடல்கள் 05 ஐ எழுதி, அதிலொரு பாடலை வகுப்பில் பாடுங்கள்.

**வீட்டுச் சூழல்**

திருவிழா காலத்தில் நடைபெறுகின்ற பொது வழிபாடுகள், பக்தி முயற்சிகளில் தினமும் குடும்பமாக பங்கு பற்றுவதற்குப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 5:0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:3** : மரியாதையுடன் மாலை ஆராதனையில் பங்கு கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- மாலை ஆராதனை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- மரியாதையுடன் மாலை ஆராதனையில் பங்குபற்ற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- மாலை ஆராதனைக்குரிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆக்கமாக முன்வைப்பர்.
- நற்கருணை ஆசீரைப் பெறுவதன் மூலம் இறைவனுடன் ஆழமான உறவைக் கட்டியெழுப்புதல்.
- மாலை ஆராதனை செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பங்கு மக்கள் ஒத்துழைப்புடன் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாலை ஆராதனையின் போது பயன்படுத்தும் பாடல்கள் உள்ளடக்கப்பட்ட தாளினை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கி அதனை அவதானிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கி கீழ்க்காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.
    - ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலிக்கு முன்தினம் மாலை ஆராதனை நடைபெறும்.
    - மாலை ஆராதனை ஒரு விசேட ஒழுங்கு முறையில் நடை பெறும்.
    - அவ் ஒழுங்குமுறை பின்வருமாறு
        - மூன்று பாடல்கள் (திருப்பாடல்கள் 2 சிறுபாடல் 1)
        - இறைவார்த்தை
        - மறை உரை
        - மரியாவின் பாடல்
        - விசுவாசிகளின் மன்றாட்டு
        - இயேசு கற்பித்த செபம் (பரலோகத்திலே இருக்கிற) செபித்தல்.
        - செபம்
        - நற்கருணை ஆசிர்

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.
    - திருப்புகழ் மாலை பற்றிய சிறு அறிமுகம்.
    - திருப்புகழ் மாலை அப்பெயரில் அழைக்கப்படுவதன் காரணம்.

- திருப்புகழ் மாலை பாடுகின்ற சந்தர்ப்பம்.
    - காலை
    - பகல்
    - மாலை
    - இரவு
- குருக்களும் துறவியரும் தினம் தோறும் திருப்புகழ்மாலை கட்டாயமாகச் சொல்ல வேண்டும்.
- மாலை ஆராதனைகளின்போது பொதுநிலையினரும் திருப்புகழ்மாலையினைச் சொல்லுகின்றனர்.

- **நற்கருணை ஆசீர் இடம்பெறும் சந்தர்ப்பங்கள்**
    - பங்கின் வருடாந்த திருவிழாவில் மாலை ஆராதனையின்போது
    - ஒவ்வொரு பங்கினதும் விசேட தேவைக்கேற்ப நடாத்துதல். (முதல் வெள்ளிக்கிழமை, முதல் வியாழக்கிழமை)
    - விசேட சந்தர்ப்பங்கள் (நற்கருணைத் திருவிழா,)
    - நற்கருணை ஆசீரின் முக்கியத்துவம்.
    - நற்கருணை எழுந்தேற்றம் செய்திருக்கும் சந்தர்ப்பத்தில் இரு முழங்கால்களையும் மடித்து ஆராதிப்பதன் முக்கியத்துவம்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- மாலை ஆராதனை வழிபாடுள்ள தாள்கள் / சிறு நூல் (மாணவரின் தொகைக்கேற்ப)
- மாலை ஆராதனை நிகழ்ச்சித்திட்டம் பொருத்தமான படம்.
- இணைப்பு 1
- டிமைன் தாள்
- பிரிஸ்டல் போட்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- குழு 1:- பாடநூலின் 21 ஆம் பாடத்தை வாசித்து கீழ்க்காணப்படும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

  திருப்புகழ்மாலை தொடர்பான சிறு அறிமுகம் ஒன்றை ஆக்கமாக முன்வைக்கவும்.
- குழு 2:- மாலை ஆராதயைின் மாதிரி, பொருத்தமான படம் என்பனவற்றை போஸ்டர் ஒன்றின் வழியாக ஆக்கமாகச் செய்யவும்.

**வீட்டுச் சூழல்**

பங்கில் நடைபெறும் நற்கருணை ஆசீர் நிகழ்வில் குடும்பமாகப் பங்குபற்றுவர்.

**தேர்ச்சி 5:0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:4** : தமது துன்பங்களை ஏற்றுக் கொள்ள இயேசுவின் துன்பங்களை முன்மாதிரிகையாகக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- சிலுவைப்பாதை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- சிலுவைப்பாதையில் பங்கேற்பதன் வழியாக இயேசுவின் பாடுகளில் பங்கேற்கலாம் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- தவக்காலத்தில் இயலுமான போதெல்லாம் சிலுவைப்பாதையில் பக்தியோடு பங்கேற்பர்.
- சிலுவைப்பாதையை ஒழுங்கு செய்வதில் ஒத்துழைப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ஐ வகுப்பில் செயல்படச் செய்து, கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக் கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - இயேசுவின் சிலுவை மரணத்திற்கு எமது பாவங்களே காரணமாய் அமைந்தன.
  - அதிகளவு உடல், உள வேதனைக்கு உள்ளானார்.
  - இயேசு மரணத் தீர்வைப் பெற்ற சந்தர்ப்பத்திலிருந்து கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது வரையான நிகழ்வுகள் சிலுவைப் பாதையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - சிலுவைப்பாதையின் வரலாற்றுச் சுருக்கம்.
  - 14 நிலைகளினதும் ஒழுங்குமுறை.
  - சிலுவைப்பாதையின் போது தேவையான பதிலுரைகள்.
  - இணைப்பு 02
  - சிலுவைப்பாதையில் அர்த்தமுள்ள முறையில் பங்கேற்பதானால் இயேசுவின் பாடுகளில் பங்காளிகளாக முடியும்.
  - எமது வாழ்வில் எதிர்கொள்ளும் துன்பதுயரங்களையும், சவால்களையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுதல்.
  - தவக்காலத்தில் வரும் வெள்ளிக்கிழமைகள் அனைத்திலும் சிலுவைப்பாதையில் பங்கேற்க வேண்டும்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1, 2
- ஒவ்வொரு பாத்திரத்துக்கும் பொருத்தமான ஆடை அணிகள்.
- மரச் சிலுவை ஒன்று.
- சிலுவைப்பாதையின் 14 நிலைகளினதும் படங்கள்.
- நிறப் பேனா, பிளட்டினம்
- பிரிஸ்டல் போட்
- A ⁴ தாள்கள்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- குழு 1:- பாடநூலின் 22 வது பாடத்தை வாசித்து ''சிலுவைப் பாதையின் வரலாறு'' தொடர்பான சுவர்ப் பத்திரிகை ஒன்று தயாரிக்கவும். (100 சொற்கள் போதுமானது.)

- குழு 2:- சிலுவைப்பாதையின் 14 நிலைகளையும் காட்டுகின்ற படங்களை ஒட்டி அந்நிலைகளின் பெயர்களை எழுதி போஸ்டர் ஒன்றினை ஆக்கவும்.

- குழு 3:- சிலுவைப்பாதையில் நீங்கள் விரும்பும் சிந்தனை ஒன்றை தயாரித்து அதனை ஆக்கமாக வகுப்பில் முன்வைக்கவும்.

## இணைப்பு 2

குழு ஆய்வுப் பத்திரம்.

இவ்வுரையாடலை பாத்திரமேற்று நடிப்பதன் வழியாக முன்வைக்கவும்.

மறைநூல் அறிஞர் : ஆளுனர் பிலாத்து அவர்களே, தலைமைக் குருக்களே, மூப்பர்களே, இவன் நம் மக்கள் சீரழியக் காரணமாக இருக்கிறான். சீசருக்குக் கப்பம் கட்டக் கூடாது என்கிறான். தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக் கொள்கிறான். இவற்றையெல்லாம் நாங்களே கேட்டோம்.

பிலாத்து : இம் மனிதன் மக்களைக் குழப்பி கலகம் செய்யத்தூண்டியவன் என்ற குற்றச்சாட்டை நீங்கள் எனது கவனத்துக்குக் கொண்டுவந்த போதும், அவை இவர் குற்றவாளி என்பதற்குப் போதுமான ஆதாரமாக இல்லை. ஏரோதும் இந்த விடயம் தொடர்பாக என்னோடு உடன்பட்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளார். எனவே இவரை தண்டித்து விடுதலை செய்யும்படி கட்டளையிடுகிறேன்.

மறைநூல் அறிஞர் : பிலாத்துவின் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மக்களே கலகம் செய்யுங்கள்.

மக்கள் : இவரைக் கொலை செய்யுங்கள். பரபாசை விடுதலை செய்யுங்கள்.

| | |
|---|---|
| பிலாத்து | : அமைதியாயிருங்கள்! மரண தண்டனை விதிக்கும் அளவிற்கு இவரிடம் ஒரு குற்றமும் நான் காணவில்லை. |
| மக்கள் | : இவரைக் கொலைசெய்யுங்கள். பரபாசை விடுதலை செய்யுங்கள். |
| மறைநூல் அறிஞர் | : நீங்கள் கேட்டுக்கொண்டபடி இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்லுங்கள். அனுமதியளிக்கிறேன். உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள். |

**வீட்டுச் சூழல்**

வாழ்க்கைப் பாதையில் எதிர்கொள்ளும் துன்ப துயரங்களைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்ள பிள்ளைகளைப் பழக்குவர்.

**தேர்ச்சி 5:0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:5** : திருமணித்தியாலத்தில் பக்தியுடன் பங்குபற்றுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- திருமணித்தியாலம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- பக்தியுடன் திருமணித்தியாலத்தில் பங்கு பற்றுவதன் வழியாக இயேசுவின் வேதனைகளில் நாமும் பங்கேற்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திருமணித்தியாலம் பற்றிய சிறு கைநூல் ஒன்றைத் தயாரிப்பர்.
- இயலுமானவரை திருமணித்தியாலத்தில் பங்கேற்பர்.
- திருமணித்தியாலத்தில் பிறரையும் பங்கேற்கச் செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- பாரம்பரிய திருமணித்தியால புத்தகங்கள் சிலவற்றை மாணவர்களுக்கு வழங்கி கீழ்க் காணப்படும் கருத்துக்களின் அடிப்படையில் சிந்தனைக் கிளரல் ஒன்றை நடத்துங்கள்.

    - திருமணித்தியாலம் நடத்தும் முறை
    - ஆரம்பப் பாடல்
    - ஆரம்பச் செபம்
    - முதலாம் கால்மணி
    - இரண்டாம் கால்மணி
    - பாடல்
    - மூன்றாம் கால்மணி
    - நான்காம் கால்மணி
    - பாடல்
    - இறுதிச் செபம்
    - பாடல்

- இப்பக்தி முயற்சி நான்கு பிரிவுகளுடன் ஒருமணித்தியாலத்தில் நடாத்தப்படுகின்றது. (முதலாம் கால்மணி, இரண்டாம் கால்மணி என்றவகையில்)

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

    - திருமணித்தியாலத்தின் வரலாறு
    - நடாத்தும் சந்தர்ப்பங்கள்
    - நடாத்தும் முறை
    - நடாத்துவதன் நோக்கம்

- இயேசுவின் கெத்சமனி செபத்தில் நாமும் பங்காளிகளாவதற்காகும்.
- விசேடமான தேவைகளின் போது
- எம்மால் தனித்து முகங்கொடுக்க முடியாத பிரச்சினைகளின்போது இறைவனின் உதவியை நாடல்.
- தொடக்ககால திருமணித்தியாலத்தின் ஒழுங்குமுறை
- இயேசுவின் திருப்பாடுகளுக்கு உதவி செய்யும் பொருட்டு நாமும் பக்தியோடு திருமணித்தியாலத்தில் பங்கேற்றல் வேண்டும்.
- பெரிய வியாழக்கிழமையன்று திருமணித்தியாலத்தில் பங்கேற்றல்.
- இயலுமான சந்தர்ப்பங்களின் போது வீட்டில் திருமணித்தியாலம் நடத்துவதன் முக்கியத்துவம்.
- பங்கு, கோட்டம், கிறிஸ்தவ ஒன்றியம் போன்றவற்றின் மூலம் நடாத்தப்படும் திருமணித்தியாலத்தில் பங்கேற்றலின் அவசியம்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருமணித்தியாலப் புத்தகங்கள் சில (ஒரு குழுவுக்கு 2 எனும் வகையில்)
- இணைப்பு 1, பிளாட்டினம், $A^4$ தாள்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

கலந்துரையாடலுக்கான அறிவுரைகள்

- குழு 1 :- 23 வது பாடத்தை கொடுத்து, கிடைத்துள்ள திருமணித்தியால புத்தகத்தை வாசித்து, கீழ்க் காணப்படும் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்ட சிறு கைநூல் ஒன்று தயாரிக்கவும்.
    - திருமணித்தியாலத்தின் வரலாறு
    - திருமணித்தியாலம் செய்வதன் நோக்கம்
    - தொடக்க கால திருமணித்தியாலத்தின் ஒழுங்குமுறை

**வீட்டுச் சூழல்**

திருமணித்தியாலத்தின் போது சொல்லப்படும் செபங்களை, சரியான முறையிலும் இராகத்தோடும் செபிப்பதற்குப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 5:0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:6** : நற்கருணை ஆண்டவருக்கு உரிய மரியாதை செலுத்துவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- நற்கருணை ஆண்டவரை சந்தித்தலும் நற்கருணைப் பவனியும் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- இயலுமான எல்லாச் சந்தர்ப்பத்திலும் நற்கருணை ஆண்டவரைச் சந்திக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- நற்கருணை ஆண்டவரைச் சந்திப்பதன் மூலம் ஆன்மாவில் புத்துயிரைப் பெறுகின்றனர்.
- நற்கருணைப் பவனியை ஒழுங்கு செய்யும் போது ஒத்துழைப்பு வழங்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை என்ற பாடல் எழுதப்பட்ட தாள்களை எல்லா மாணர்களுக்கும் வழங்கி, அதனை எல்லோரும் ஒன்றாகச் சேரந்து பாடி, கீழ்க் காணப்படும் காரணங்களை வெளிக்கொணர கலந்துரையாடலை நடத்துங்கள்.

    - நற்கருணை ஆசீர்வாதத்தின் போது பாடப்படும் பாடலாகும்.
    - நற்கருணை ஆசீர்வாதம் நடத்தப்படும் சந்தர்ப்பங்கள்.
    - நற்கருணை ஆசீர்வாதத்தை நடத்தும் ஒழுங்கு முறை.
    - இச் சந்தர்ப்பத்தில் குரு அணியும் உடைகள்.
    - நற்கருணை ஆராதனையின் போது எமது உடல் நிலை.
    - எமது வாழ்வில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை இறைவன் தருவார் என எதிர்நோக்குவர்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

    - நற்கருணை சந்திப்பின் நோக்கம்.
        - நற்கருணையில் எழுந்தருளியிருக்கும் உயிருள்ள இயேசுவிடம் செபித்தல்.
        - எமது செப வபழ்வை ஊட்டம் பெறச் செய்தல்.
        - இயேசுவோடு ஆழமான உறவை ஏற்படுத்தல்.
        - எமது மரியாதையைச் செலுத்துதல்.
        - எமது ஆன்மா, உடல் தேவைகளில் இறைவனிடம் உதவியை வேண்டுதல்.

- இவ்வாறு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள்
    - கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களும்.
    - ஆலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டுள்ள போது
    - நற்கருணை ஆராதனை நடத்தும் போது
    - எமது தேவைகளில் அவருடைய உதவியை நாடும் பொழுது.

- நற்கருணைப் பவனியின் நோக்கம்.
    - நற்கருணை ஆண்டவருக்கு மரியாதையை செலுத்துதல்.
    - நற்கருணை ஆசீர்வாதத்தை கிராமத்துக்கும் அங்கு வசிப்போருக்கும் பெற்றுக் கொடுத்தல்.
    - இயேசு எம்மோடு பயணிக்கிறார் என்பதை எடுத்துக் காட்டுதல்.

- நற்கருணை பவனியில் பங்கு பற்ற வேண்டிய முறை.
    - நற்கருணைப் பவனியில் பாடப்படும் பாடல்களிலும் செபங்களிலும் பங்குபற்றுதல்.
    - கதைக்காமல் செல்லுதல்.
    - ஒழுங்காக நடந்து செல்லுதல் (இருவராக அல்லது மூவராக)
    - எளிமையான, வெள்ளை உடைகள் அணிந்திருத்தல்.

- நற்கருணை பவனிக்கான ஆயத்தம்
    - நற்கருணை ஆண்டவரை பவனியாக எடுத்து வரும் இரதத்தினை ஆயத்தம் செய்தல்.
    - பொருத்தமான பாடல்களையும் செபங்களையும் தாள்களில் அச்சிடல்.
    - ஆலயத்தையும் வீதிகளையும் அலங்கரித்தல்.

- நற்கருணை எழுந்தேற்றம் செய்திருக்கும் ஆலயத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறை
    - அமைதி பேணல்.
    - நற்கருணை ஆண்டவருக்கு இரு முழங்கால்களையும் மடித்து தலை வணங்கி எமது மரியாதையைச் செலுத்துதல்.
    - தனியாகவோ, குழுவாகவோ செபித்தல்.
    - மரியாதையாக ஆலயத்துள் நடந்து கொள்ளுதல்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 1
- பிளட்டினம்
- டிமைன் தாள்
- $A^4$ தாள்
- "மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை" பாடல் பிரதிகள் (எல்லா மாணவருக்கும்)
- பிரிஸ்டல் போட்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- குழு 1 : பாட நூலின் 24வது பாடத்தை வாசித்து கீழ்க் காணப்படும் கருத்துக்களை உள்ளடக்கிய போஸ்டர் ஒன்றை ஆக்கமாகத் தயாரிக்கவும்.
    - நற்கருணை சந்திப்பு செய்யும் சந்தர்ப்பங்கள்.
    - நற்கருணை எழுந்தேற்றம் செய்துள்ள சந்தர்ப்பத்தில் ஆலயத்தில் நடந்து கொள்ளும் முறை.
    - நற்கருணை பவனி நடைபெறும் சந்தர்ப்பங்கள்.
    - நற்கருணை பவனியில் நடந்து கொள்ளும் முறை.

மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை பாடல்

மாண்புயர் இவ்வருள் அனுமானத்தைத்
தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும்
இனி மறைந்து முடிவு பெறுக.

புதிய நியம முறைகள் வருக
புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலா குறையை நீக்க
விசுவாசத்தின் உதவி பெறுக.

பிதா அவர்க்கும் சுதன் அவர்க்கும்
புகழ்ச்சியோடு வெற்றி ஆர்ப்பரிப்பும்
மீட்பின் பெருமை மகிமையோடு
வலிமை வாழ்த்து யாவும் ஆக

இருவரிடமாய் வருகின்றவராம்
தூய ஆவியானவருக்கும்
அளவில்லாத புகழ்ச்சி
என்றுமே உண்டாகுக ஆமென்.
(இராக தீபங்கள் பாடல் எண்: 234 பக்கம்: 177)

**வீட்டுச் சூழல் :**

ஆலயத்தைக் கடந்து செல்லும் போது நற்கருணை சந்திப்பு செய்யும் படி பிள்ளைகளுக்குப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 5:0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:7** : தகுதியான ஆயத்தத்தோடு திருயாத்திரைகளில் பங்கேற்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- திருயாத்திரை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- திருயாத்திரை செல்லும் போது ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திருத்தலங்கள் சிலவற்றின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட சிறு கைநூல் ஒன்றினைத் தயாரிப்பர்.
- திருப்பலி, பக்தி முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் ஆன்மாவில் புத்துயிரைப் பெறுகின்றனர்.
- திருத்தலங்களில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- போஸ்டர் ஒன்றின் அளவில் தயாரிக்கப்பட்ட இலங்கைப் படத்தில் இலங்கையில் முக்கிய கிறிஸ்தவ திருத்தலங்களின் படங்களை அத்திருத்தலங்கள் அமைந்துள்ள இடங்களில் ஒட்டி, மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி கீழ்க் காணப்படும் காரணங்களைக் கலந்துரையாடுதல்.

    - இலங்கைப் படத்தில் காட்டப்பட்டுள்ள திருத்தலங்களை இனங்காணல்.
    - இத் திருத்தலங்களின் திருவிழாக்களில் வருடந்தோறும் பக்தர்கள் பங்குபற்றுதல்.
    - இத் திருத்தலங்களில் நடாத்தப்படும் ஆராதனைகளிலும் பக்தி முயற்சிகளிலும் பங்கேற்றல்.
    - எமது ஆன்மீக, உடல் தேவைகளுக்காக திருயாத்திரை செல்லுதல்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

    - திருயாத்திரை செல்வதன் நோக்கம்.
        - உண்மையான ஒரே இறைவனை சமூகமாக ஆராதனை செய்தல்.
        - பெற்றுள்ள வரங்களுக்கு நன்றி கூறல்.
        - தமது ஆன்மீக, உடல் தேவைகளுக்காக இறைவனைச் சந்தித்து உதவி புரியும்படி வேண்டுதல் செய்தல்.

          (திருயாத்திரை செல்லும் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரிடம்)
        - திருயாத்திரைத் தலங்களை இனம் காண்பதும், அறிந்து கொள்வதும்.

    - திருத்தலங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறை.
        - சமூகமாகச் சொல்லும் செபங்களிலும் பக்தி முயற்சிகளிலும் பங்கு பற்றுதல்.

- அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்ளல், மரியாதையான உடை
- மது அருந்துதல் போன்றன தவிர்த்தல்.

- திருத்தலங்களில் அணியும் ஆடை அணிகலன்கள்
- திருத்தலங்களில் நடத்தப்படும் திருப்பலியிலும் பக்திமுயற்சிகளிலும் பங்கு பற்றல்.
- பொது வளங்களை சிக்கனமாக பாவித்தல், மற்றும் பகிர்ந்து கொள்ளுதல்.
- பண்போடு பேசுதல்.
- நன் நடத்தை

- இலங்கையின் முக்கிய திருத்தலங்களும் அவை தொடர்பான தகவல்களும் (மடு, தலவில, தேவத்தை, மாத்தறை)
  - வெளி நாடுகளில் உள்ள முக்கிய திருத்தலங்களும் அவை தொடர்பான தகவல்களும் (புனித பூமி, பதுவை, கோவா, வேளாங்கண்ணி )

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இலங்கையின் முக்கிய திருத்தலங்கள் குறிக்கப்பட்ட படங்கள்
- இலங்கையின் முக்கிய திருத்தலங்கள், அதற்குரிய படங்கள்.
- இணைப்பு 1
- பிரிஸ்டல் போட்
- பிளட்டினம்
- A 4 தாள்
- நிறப் பேனா

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றல் பேறுகள் எய்தப் பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- பாட நூலின் 25வது பாடத்தை வாசித்துக் கீழ்க் காணப்படும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- குழு 1:- தேசிய திருத்தலத்தின் தகவல்கள் உள்ள சிறு கைநூல் ஒன்றைத் தயாரிக்கவும்.
  - திருத்தலம் அமைந்துள்ள இடம்
  - திருத்தலத்தின் ஆரம்ப வரலாறு (சுருக்கமாக)
  - மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கான காரணம் (சுருக்கமாக)

- குழு 2:- வெளிநாட்டு திருத்தலங்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ள போஸ்டர் ஒன்று தயாரிக்கவும்.
  - திருத்தலம் அமைந்துள்ள இடம்
  - திருத்தலத்தின் ஆரம்ப வரலாறு (சுருக்கமாக)
  - மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கான காரணம் (சுருக்கமாக)

**வீட்டுச் சூழல் :**

திருயாத்திரை செல்லும் போது மரியாதையோடு நடந்து கொள்ளுங்கள்